# ஆண்டறிக்கை 2012

## தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி
அதிகாரசபை
மட்டம் 2, West Wing, செலிங்கோ ஹவுஸ்,
இல. 69, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
06/02/2013

நோக்கு

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

த.பெ. 570, 73/1, காலி வீதி

கொழும்பு 03.

கனம் ஐயா,

**<u>2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை</u>**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) பந்தியின் பிரகாரம், கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன்.

1. 2012 ஆம் ஆண்டிக்கான தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்ற அறிக்கை.

2. 2012 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை, 2012 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான வரவு செலவுக் கூற்றுக்கள், மற்றும் 2012 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான பண ஓட்டக் கூற்றுக்கள்

3. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

இப்படிக்கு உண்மையுள்ள

என்.எம். ஷஹீட்

தலைவர் / பணிப்பாளர் நாயகம்

"சக்தி வாய்ந்ததும், நிலைத்து நிற்கக் கூடியதும் போட்டிமிக்கதுமான தொழில் முயற்சித் துறையை உருவாக்குதல். இது தேசத்தின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக அபிலாஷைகளுக்கு பங்களிப்புச் செய்யும்."

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கம்

ேசிய பொருளாதாரத்துடன் என்றும் தொடர்புபடக்கூடிய ஒரு துறையாக தேசிய அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்கும் றும் போட்டித் தன்மைக்கும் உதவியளித்தலும்

செயற்பணி

- இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி அபிவிருத்தியை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், மற்றும் வசதியளித்தல் ஆகியவற்றின் மூலம் வளர்ச்சிக்காகத் தூண்டுதல், இலங்கையின் பொருளாதாரத்தை விரிவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

- தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வெளி நாட்டுச் சந்தைகளை வெற்றி கொள்ளக் கூடிய தொழில் முயற்சியை சர்வதேசமயப்படுத்துவதின் மூலம் இலங்கைக்கு வெளியில் தொழில் முயற்சிகளை அமைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் தூண்டுதலும் அதற்காக ஊக்குவித்தலும்.

- கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைகளின் அபிவிருத்தி, வர்த்தகத்தை மேம்படுத்துதல், மற்றும் வினைத் திறன் மிக்க ஒத்துழைப்பை வழங்குதல் போன்றவற்றுக்குப் பொருத்தமானதாகத் தயாரிக்கப்பட்ட கொள்கை, வளர்ச்சிக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் திட்டமிடல்.

- தொழில் முயற்சி அபிவிருத்திக்காக தொடர்ந்தும் இருக்க வேண்டிய துறையாக மானிட மூலதன அபிவிருத்திக்கான புதிய தொழில் நுட்பத் திறன்களைக் கொண்ட மக்களுக்கு அதிகாரமளித்தல்

- அபிவிருத்தித் தேவைகளை எதிர்க்கொள்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

- தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழிற்பாடு என்பவற்றுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு தொழில் முயற்சியாளர்களுக்கு வசதியளித்தல்.

- உற்பத்தி அபிவிருத்தி, தொழில் நுட்ப அபிவிருத்தி, தனியுரிமைப் பத்திரத்தை வர்த்தகமயப்படுத்தல் போன்றவை தொடர்பான ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கையின் வளர்ச்சிக்காக தொழில் நுட்ப அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்.

- பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளித்தல்.

**2012 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை**

ஆண்டறிக்கை – 2012

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

**1.0 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக் கொள்கை**

1.1 தொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகள்/ சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நிறுவகக் கட்டமைப்பு

1.1.1 தொழில் முயற்சிக் கட்டமைப்பும் மாவட்ட தொழில் முயற்சிக் கட்டமைப்பும்

1.1.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் வழிகாட்டல் நூல் மற்றும் வியாபார அவிருத்தி சேவை வழங்குனர் விபரக்கொத்து

1.1.3 தரவு அடிப்படை மற்றும் இணைய தள விருத்தி

1.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கொள்கையின் தயாரிப்பும் அமுலாக்கமும்.

**2.0 சந்தைப்படுத்தல், தொழில்முயற்சி மற்றும் நிறுவக அபிவிருத்தி**

2.1 “கமட்ட ஒபின” வியாபார நிகழ்ச்சித்திட்டம்

2.2 இலங்கை தொழில் முயற்சியாளர்களின் இயலளவைக் கட்டியெழுப்புதல்

2.3 வியாபார அபிவிருத்தி சேவைக் கட்டணங்கள்

2.4 உள்ளூர் வியாபாரங்களின் சர்வதேசமயமாக்கலும் மூலப்பொருள் மற்றும் நவீன தொழில்நுட்பவியலுக்கான முன்னேற்றப் பாதை

2.5 புவியியல் இடத்தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

2.5.1 மொறட்டுவை மரத் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

2.5.2 தும்புத் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

2.5.3 கைத்தறித் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

2.6 “உபாதிதாரி விவசாயக்க உதானய” நிகழ்ச்சித்திட்டம்

2.7 உள்ளூர் ஊதுபத்தித் தயாரிப்பை ஊக்குவித்தல்

2.8 தொழிநுட்பவியல் அபிவிருத்தி நிதியம்

2.9 தொழிநுட்பவியல் மாற்றம்

2.10 இலத்திரனியல் ஊடகத்தினூடாக நிறுவகக் கல்வி

2.11 பாடசாலைப் போட்டி

2.12 தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி

2.13 “திவிநெகும” தேசிய நிகழ்ச்சித்திட்டம்

2.14 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் உதவிச் சேவைகள்

# 1. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக் கொள்கை

## 1.1 தொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகள்/ சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நிறுவகக் கட்டமைப்பு

***“இலங்கை தொழில்முயற்சியாளர்களின் வலையமைப்பை நோக்கி”***

1.1.1 தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டிணைந்த திட்டத்தின் படி, மாவட்ட மட்டத்தில் வியாபார சிக்கல்களை இனங்கண்டு அவற்றை தீர்க்கும் நோக்கிலும் கொள்கை தயாரிப்பிற்காகவும் மாவட்ட தொழில் நிறுவகக் கட்டமைப்புக்களை ஸ்தாபிப்பதனை உள்ளடக்கியுள்ளது. மாவட்ட தொழில் முயற்சிக் கட்டமைப்புகள் மாவட்ட மட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டு அவற்றில் அரச மற்றும் அரச சார்பற்ற வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களையும் மாவட்டத்தில் உள்ள கழகங்களையும் வியாபார அல்லது விற்பனை அமைப்புக்களையும் கொண்டுள்ளது.

**நிகழ்ச்சித்திட்ட நோக்கங்கள் :**

I. மாவட்ட மட்டங்களில் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கிடையே உறவை வலுப்படுத்தல்.

II. பொது மக்களுக்கு தனிப்பட்ட கருத்துப் பரிமாற்றங்களுக்கு வசதியளித்தல்.

III. மாவட்ட தொழில் முயற்சிக் கட்டமைப்பிற்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் அமைப்புகளுகிடையே முறையான ஒருங்கிணைப்பை உருவாக்குதல்.

IV. மாவட்ட தொழில் முயற்சிக் கட்டமைப்பினூடாக தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதற்கு ஓர் முறைமையை விருத்தி செய்தல்.

V. மாவட்ட மட்டக் கட்டமைப்பிலுள்ள தீர்க்கப்படாத வியாபாரப் பிரச்சினைகளைச் சேகரித்து தேசிய தொழில் முயற்சிக் கட்டமைப்பில் முன்வைத்தல்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, மாவட்ட தொழில் முயற்சிக் கட்டமைப்பை நிதி உதவி மூலமும் தொழில்நுட்ப வழிகாட்டலுடனும் வலுப்படுத்துகின்றது. வரைபமைப்பில் குறைந்த மட்டங்களில் தீர்க்கப்படாத பிரச்சினைகளும் தேசிய அளவில் இனங்காணப்பட்ட வியாபாரப் பிரச்சினைகளும் மாவட்ட தொழில் முயற்சிக் கட்டமைப்பில் கலந்துரையாடப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் பதுளை, மாத்தளை, அனுராதபுரம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் பதின்னாக்கு மாவட்ட தொழில் முயற்சிக் கட்டமைப்புக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இரத்தினபுரி, கேகாலை மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் புதிதாக மாவட்ட தொழில் முயற்சிக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 1.1.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் வழிகாட்டல் நூல் மற்றும் வியாபார அவிருத்தி சேவை வழங்குனர் விபரக்கொத்து

***"சகல தொழில்முயற்சியாளர்களுக்கும் தகவல்"***

**வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் மற்றும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர் வலுப்படுத்தலின் தேசிய விபரக்கொத்து வெளியீடு**

வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் தொழில்முயற்சி அபிவிருத்திக்காகப் பெரும் பங்காற்றுகின்றனர். வெவ்வேறு வகையான அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் துறை அபிவிருத்தியில் ஈடுபட்டு குறிப்பாக சந்தைப்படுத்தல், தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் பரிமாற்றம், நிதியீட்டல், தொழில்முயற்சி அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம் முதலியவற்றிற்கு உதவுகின்றனர். கூட்டிணைந்த திட்டத்தின் படி, நாடெங்கிலும் வியாபித்துள்ள வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் பற்றி தொழில் முயற்சியாளர்களுக்கிடையே விழிப்புணர்ச்சியை அதிகரிக்கும் நோக்குடன் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேசிய விபரக்கொத்தின் தயாரிப்பிலும் வெளியிடலிலும் தற்போது தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டுள்ளது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை ஐந்து படிமுறைகளில் மேற்கொள்கின்றது.

1. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களைப் பதிவு செய்தல்.

2. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் நாட்டில் உள்ள சகல வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களையும் பதிவு செய்தல்.
தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்படுகிறது. அவர்களது பொதுவான தகவல்களும் சேவைகளும் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

3. தேசிய விபரக்கொத்தின் வெளியீடு
தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இவ் விபரக்கொத்தை பிராந்திய மட்டத்தில் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலமும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைால் நடாத்தப்படும் பிராந்திய மட்ட நடவடிக்கைகளின் மூலமும் வெளியிடுகின்றது.

4. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேவைப்பாட்டு மதிப்பீடு
மனித வளங்களின் அபிவிருத்தியைக் குறிப்பாகக் கொண்ட ஓர் வடிவமைப்பின் மூலம் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேவைப்பாட்டு மதிப்பீட்டை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொள்கின்றது.

5. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களை வலுப்படுத்தல்

தேவைப்பாட்டு மதிப்பீட்டின் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுள்ளது.

2012 இல் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர் விபரக்கொத்தின் ஓர் மென்பொருள் வடிவத்தை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பூர்த்திசெய்துள்ளது. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர் விபரக்கொத்தை வெளியிடுவதற்கு எண்ணியுள்ளது.




**சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி வழிகாட்டல் நூல்**

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 2010 இல் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் வழிகாட்டல் நூலை அறிமுகப்படுத்தி 2011/2012 இல் மீளாய்வு செய்துள்ளது. தற்போது இது மும்மொழிகளிலும் கிடைக்கப்பெறுகிறது. தேசிய மட்டத்தில் வழிகாட்டல் நூல் 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மேலும் 5 மாவட்டங்களில் வெளியீட்டு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

### 1.1.3 தரவு அடிப்படை மற்றும் இணைய தள விருத்தி

நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் துறைக்கு சேவையாற்றும் ஓர் தொடர்பாடல் வழிமுறையாக ஓர் முக்கிய பங்கை இணையதளம் ஆற்றுகின்றது. தொழில்முயற்சியாளர்கள்/ தொழில் முயற்சிகளுக்கு உரித்தான தகவலை வழங்குவதற்கான ஓர் இலகுமுறையாகவும் நவீன வழிமுறையாகவும் உள்ளது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இணையதளத்தின் இயலளவை மேம்படுத்தவதற்காகவும் தகவலின் தரம் மற்றும் மதிப்பீட்டையும் முன்னேற்றுவதற்கும், மீளமைக்கப்பட்டதாகும். தற்போது நாளாந்தம் ஏறத்தாழ 390 பார்வையாளர்கள் இவ் இணையதளத்தில் இணைகின்றனர். 50 முதல் 60 தொழில் முயற்சியாளர்கள் ஒவ்வொரு மாதமும் இணையதளத்தில் பதிவாகின்றனர். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் வழிகாட்டல் நூல் மும்மொழிகளிலும் கிடைக்கப்பெறுகின்றது.

## 1.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கொள்கையின் தயாரிப்பும் அமுலாக்கமும்.

இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக்கான உதவிக்காகவும் ஊக்கவிப்பிற்காகவும் 2006 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் கீழ் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது. அதிகாரச் சட்டத்தின் படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் அபிவிருத்திக்கான கொள்கைகளைத் தயாரிப்பதும் ஓர் குறிக்கோளாகும். அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவானது இவ் அதிகாரசபையின் குறிக்கோள்களையும் துணைப்பிரிவு (சீ) ஐயும் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளது.

**“முறைப்படி வடிவமைக்கப்பட்ட கொள்கைகள், திட்டங்கள், ஊக்குவிப்பு பணிக்கொடைகளை வகுத்து ஆக்கபூர்வமாக உதவியளித்து கைத்தொழில் மற்றும் விவசாயத்தில் வியாபார மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்தல்.”**

இலங்கையில் வர்த்தகச் சூழலை முன்னேற்றுவதற்காகவும் இயலுமான அளவிலான கொள்கை வகுத்தலுக்காகவும் தொழில்முயற்சிப் பிரச்சனைகளை இனங்கண்டு, பகுப்பாய்வு செய்து, மேற்குறித்த நலன் பெறுனர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் அரங்குகளில் கிரமமான அமர்வுகளில் பங்கேற்று பரிந்துரைகளை உயர் அதிகாரிகளுக்குச் சமர்ப்பிப்பதற்காக ஆதரித்து வாதிடும் கொள்கை மீதான தொழில்தரப்பு (WGPA) 2010 இல் உருவாக்கப்பட்டது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, 2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆதரித்து வாதிடும் கொள்கை மீதான தொழில்தரப்பு என்ற பெயர் தொழில்முயற்சி அரங்கம் (EF) என மாற்றப்பட்டது. ஆதரித்து வாதிடும் கொள்கை மீதான தொழில்தரப்பானது பெயர் மாற்றத்துடன் முறைமைக்கு பிணைக்கப்பட்ட பிராந்திய தொழில் முயற்சியாளர்களுக்கான நிறுவகக் கட்டமைப்பை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அறிமுகப்படுத்தியது. 2012 ஆம் ஆண்டில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஆசிய மன்றத்தின் ஒருங்கிணைப்புடன் பிரச்சனைகள் மற்றும் வழங்கப்பட்ட தீர்வுகளைப் பட்டியல்படுத்திப் பேணுவதற்காக ஓர் பிரச்சனை இனங்காட்டியை தயாரித்தது.

## 2. சந்தைப்படுத்தல், தொழில்முயற்சி மற்றும் நிறுவக அபிவிருத்தி

***"சுபீட்சமான தொழில்முயற்சிக் கலாச்சாரத்தினூடாக இலங்கையின் உருவாக்கம்."***

### 2.1 "கமட்ட ஒபின" வியாபார நிகழ்ச்சித்திட்டம்

பொருளாதார அபிவிருத்தின் ஓர் கூறாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் இனங்காணப்பட்டுள்ளன. இலங்கைச் சனத்தொகையில் பெரும்பாலானோர் கிராமியப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். இவர்கள் மொத்த சனத்தொகையின் 78 சதவீதமானோர் ஆவர். பிராந்தியப் பகுதிகளிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறை அபிவிருத்திக்கும் தொழில்வாய்ப்பிற்குமான பாரிய வளமாகத் திகழ்கின்றனர். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எதிர்பார்த்த நிலையை இத்துறை எய்தவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

இத்திட்டம் இரு பெருங்கூறுகளைக் கொண்டமைந்துள்ளது.

1. மாவட்ட மட்டப் படிமுறையின் (LOCA) மூலம் தரப்பட்ட புவியியல் பகுதியில் போட்டியான வியாபாரத் துறையின் அபிவிருத்திக்கான பிரச்சனைகளையும்

தீர்வுகளையும் போட்டியான வியாபாரச் சந்தர்ப்பங்களையும் இனங்கண்டு கொள்ளல்.

2. துறை அபிவிருத்தித் தீர்மானங்களினதும் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினதும் அமுலாக்கம்.

## தொழில் முயற்சி அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இப்பயிற்சி, தெரிவுசெய்யப்பட்ட நலன் பெறுனர்களின் தொழில்முயற்சித் திறன் அபிவிருத்தி மீது பெருமளவு கவனத்தை செலுத்தியுள்ள அதேவேளை அவர்களது முழுமையான எதிர்கால இலக்குகளை எய்துவதற்கான ஓர் சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நலன் பெறுனர்களுக்கு தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சி ஒன்று பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு வழங்கப்படுகின்றது.

- ஓர் தொழில்முயற்சியாளராக தன்நம்பிக்கை விருத்தி
- நிதிசார் அறிவின் முன்னேற்றம்
- வியாபாரத் திட்டத் திறன்கள் மற்றும் முகாமைத்துவ இயலுமை விருத்தி





**வியாபாரத் திட்டங்களின் நிதியீட்டல்**

பரிந்துரைக்கப்பட்ட வியாபாரத் திட்டங்களுக்காக ஓர் நிதியுதவி தேவைப்படுகையில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மானியம் ஒன்றை வழங்குவதற்காகவோ அல்லது ஓர் வங்கிக் கடனைப் பெறுவற்காகவோ வசதியளிக்கின்றது.

**வியாபாரங்களின் தொழில்நுட்ப முன்னேற்றங்கள்**

தொழிநுட்ப மாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகங்களுக்கு கள ஆய்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக, பின்வரும் தொழிநுட்ப வகைகள் நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பின் போது மிக முக்கிய இடம் பெறுகின்றன.

- மனிதத் தொடர்பு இயலளவு அபிவிருத்தி/ குறிப்பாக தொழில்நுட்ப திறன்கள்.
- புதிய உற்பத்தி நடைமுறைகளின் அறிமுகம்.
- புதிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் அறிமுகம்.
- உற்பத்தி அபிவிருத்தியும் மேம்பாடும்
- உற்பத்தி மற்றும் தர முன்னேற்றங்கள்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்படும் நிதி உதவி மற்றும் நலன் தேவைப்பாடுகளின் படி தொழிநுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தரின் உதவியுடன் பிரதேச செயலகம் ஒழுங்குபடுத்துகின்றது.

## சந்தைப்படுத்தல் அபிவிருத்தி

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பிரதேச செயலகங்களின் உதவியுடன் பயிற்சி நிகழ்ச்சிகளையும் கள ஆய்வுகளையும் ஒழுங்குபடுத்தியுள்ளது.

- பொதி வடிவமைப்பு
- சந்தைப்படுத்தற் திறன் அபிவிருத்தி
- பொருள் வடிவமைப்பு மேம்பாடு
- நிகழ்ச்சி வடிவமைப்பு மேம்பாடு

## வியாபார நெறிப்படுத்தலும் பின்தொடர் நடவடிக்கைகளும்.

பிரதேச செயலகங்கள்/ வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் ஆதரவுடன் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையால் வியாபார நெறிப்படுத்தலும் பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 இல், தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச செயலகங்களின் உதவியுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கூறை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டது. பிரதேச செயலகங்களினூடாக நலன்பெறுனர்கள் இனங்காணப்பட்டு மன்னார், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களிலிருந்து 140 நலன் பெறுனர்கள் இனங்காணப்பட்டு தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி வழங்கப்பட்டு அவர்களது வியாபாரங்களை ஸ்தாபித்து விரிவுபடுத்த உதவுகின்றது.

அத்துடன் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 119 தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்கியதுடன் இவர்களில் 50 நலன்பெறுனர்கள் குருநாகல் மாவட்டத்திலிருந்தும், 29 நலன் பெறுனர்கள் மன்னார் மாவட்டத்திலிருந்தும் 10 நலன் பெறுனர்கள் கம்பஹா மாவட்டத்திலிருந்தும் 30 நலன் பெறுனர்கள் மட்டகளப்பு மாவட்டங்களிலிருந்துமாவர்.

## துறை அபிவிருத்தி நிகழ்ச்சிகள்

### மலர் வளர்ப்புத் துறை:

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை குருநாகல் மாவட்டத்தில் உள்ளூர் போட்டி நலன் நிகழ்ச்சியை (LOCA) நடாத்தியது. இது வட மேல் மாகாணத்தில் போட்டியான வியாபாரத் துறைகளில் ஒன்றாக மலர் வளர்ப்புத் துறையை இனங்கண்டுள்ளது. ஆகவே தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை உதவியுடன் வட மேல் மாகாணத்தில் மலர் வளர்ப்புத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டது.

**செயலமர்வின் நோக்கங்கள்**

- நடைமுறைப் பிரச்சனைகளை இனங்கண்டு தீர்மானங்களை முன்வைத்தல்.
- வளர்ப்பவர்களுக்கும் ஏனைய தரப்பினர்களுக்கும் உரிய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களின் சேவைகள் பற்றி அறிவூட்டல்.
- நலன் பெறுனர்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.
- துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டாத்திற்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கான தகவலைச் சேகரித்தல்

பேரவை அறிக்கையைச் சார்ந்து குருநாகல் மாவட்டத்தில் மகளிர் மன்றத்தின் உதவியுடன், மலர் வளர்ப்புக் கண்காட்சியை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நடாத்தியது. அத்துடன் 2012 இன் போது வடமேல் மாகாணத்தில் 107 மலர்ச் செய்கையாளர்களுக்காக தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பூர்த்தி செய்திருந்தது.

## *2.2 இலங்கை தொழில் முயற்சியாளர்களின் இயலளவைக் கட்டியெழுப்புதல்*

***"மனித இயலுமையை போட்டிவாய்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களிடம் மெருகிடல்"***

**வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபார அமைப்புகளின் இயலளவு அபிவிருத்தி**

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அபிவிருத்தி, வளர்ச்சி மற்றும் இலங்கையின் தொழில்முயற்சிகளின் போட்டித் தன்மைகளுக்கு வசதியளித்து தமது இயலுமை விருத்திக்காக வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கு சேவைகளை வழங்குகின்றது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேவைகளுக்கான மதிப்பீட்டை நடாத்தி மனிதவள இயலுமைகளை விருத்தி செய்கின்றது. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர் அவர்களுக்கு மேம்பாடு, அறிமுகம் மற்றும் அன்பளிப்பு முறைமையையும் அமுலாக்குகின்றது. இதற்கு மேலதிகமாக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை குறுங்காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தொழில்முயற்சியாளர்களுக்கும் வியாபார அமைப்புகளுக்கும் பல்வேறு பிராந்திய தேவைப்பாடுகளுக்கு அமைய நடாத்திவருகின்றது.

### 2012 வரையான முன்னேற்றம்

| பயிற்சி நிகழ்ச்சி | மாவட்ட/ பகுதி | நலன்பெறுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **தொழில்நுட்பப் பயிற்சிகள்** | | |
| உணவு பதனீடு | மட்டக்களப்பு | 151 |
| ஆடைத் தயாரிப்பு | திருகோணமலை | 165 |
| **ஏனைய பயிற்சிகள்** | | |
| சந்தைப்படுத்தலும் நுகர்வாளர்களும் | பொலன்னறுவை | 35 |
| தரமும் உற்பத்தியும் | புத்தளம் | 35 |

| | | |
|---|---|---|
| மனித வள முகாமைத்துவம் | இரத்தினபுரி | 24 |
| மனித வள முகாமைத்துவம் | புத்தளம் | 22 |
| உற்பத்திக் கிரயமும் விலையிடலும் | அநுராதபுரம் | 25 |
| மனித வள முகாமைத்துவம் | குருநாகல் | 30 |
| மனித வள முகாமைத்துவம் | அனுராதபுரம் | 29 |
| நிதித் தீர்மானம், வரி மற்றும் கணக்கியல் | குருநாகல் | 36 |
| **குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகள்** | | |
| புத்தகப் பதிவும் கணக்கியலும் | பொலன்னறுவை | 35 |
| ஆடைத் தயாரிப்பு | திருகோணமலை | 44 |
| சந்தைப்படுத்தல் | குருநாகல் | 32 |
| பனை உற்பத்திகள் | மன்னார் | 35 |
| பண்ணை முகாமைத்துவம் | குருநாகல் | 25 |
| சட்டச் சூழலும் அடிப்படை வியாபார நடைமுறைகளும் | செருதுவர | 24 |
| | இரம்பொட | 17 |
| | கோண்டாவில் | 23 |
| | கிளிநொச்சி | 33 |
| | மட்டக்களப்பு | 64 |
| | அம்பாறை | 22 |
| அடிப்படைக் கணக்கியலும் பதிவு முறையும் | சிலாபம் | 30 |

## 2.3 வியாபார அபிவிருத்தி சேவைக் கட்டணங்கள்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கூட்டிணைந்த திட்டத்தின் படி (தொடர்பு இல. 3.4.1) பிராந்திய மட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் வியாபார வர்த்தகக் கண்காட்சிகளும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர் சேவைக் கண்காட்சிகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நாட்டிலும் பிராந்தியங்களிலும் கிடைக்கப்பெறும் வியாபார அபிவிருத்திச் சேவைகள் குறித்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களில் பலர் தெரிந்து கொண்டிராமை தெளிவாக உள்ளது. ஆகவே வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களிடமிருந்து உயர் நலனைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர். தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கும் இடையிலான இவ் இடைவெளியை நிரப்பும் வகையில் வலுவான பிணைப்பும் ஒருங்கிணைப்பும் உருவாக்கப்பட வேண்டும். வியாபார சேவை வர்த்தகக் கண்காட்சிகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கும் இடையிலான

இடைவெளியை நிரப்பி தற்போதுள்ள வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களிடமிருந்து பாரியளவு சேவைகளைப் பெறுவதற்கு இடமளித்துள்ளது.

**குறிக்கோள்கள்**

i. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கிடையிலான இடைவெளியை இணைத்தல்.

ii. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் அபிவிருத்திக்கான வியாபார வலையமைப்பை விருத்தி செய்தல்.

iii. பிராந்தியத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களில் உற்பத்திகளை ஊக்குவித்து சந்தைப் பிணைப்பை உருவாக்குதல்.

2012 இல் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை குருநாகல், மட்டக்களப்பு, மன்னார் மற்றும் அநுராபுர மாவட்டங்களில் நான்கு வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர் கண்காட்சிகளை நடாத்தியது.

## 2.4 உள்ளூர் வியாபாரங்களின் சர்வதேசமயமாக்கலும்

உள்ளூர் வியாபார உருவாக்கலின் சர்வதேசமயமாக்கலின் முதலாம் படிமுறையாக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை உலக முன்னணி சர்வதேச தொழிநுட்ப காட்சியறையில் ஓர் வியாபார பிரதிநிதித்துவத்தை ஒழுங்குபடுத்தியது.

2012 இல் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அநுராதபுர மாவட்ட வர்த்தகக் கழகத்தின் ஒருங்கிணைப்புடன் சீனாவில் குவான்ஹோ நகரில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருட் கணக்காட்சியை 37 அங்கத்தவர்களின் பங்கேற்புடன் வியாபார பிரதிநிதித்துவத்தை ஒழுங்கமைத்தது.

## 2.5 புவியியல் இடத்தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தற்போதுள்ள கைத்தொழில் தொகுதிகளை இனங்கண்டு குறித்த தொகுதியினதும் புவியியல் பகுதியினதும் பெறுமதிச் சங்கிலியை பரீட்சிக்கின்றது. இதன் படி, தொகுதியின் வியாபார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கு ஆய்வுகளை மேற்கொள்கின்றது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் கீழ் விசேட பொருளாதார பிராந்தியமாக உயர் விருத்திக்குரிய தொகுதிகள் விருத்திக்காக தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தற்போது

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மொறட்டுவை மரத்தொகுதி, வயம்ப தும்பு மற்றும் கிழக்கு மாகாண கைத்தறித் தொகுதியை இனங்கண்டுள்ளது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சந்தை அபிவிருத்தி, தொழில்முயற்சி அபிவிருத்தி, தொழில்நுட்ப மாற்றம், மற்றும் நிதியுதவி முதலியவற்றின் உதவியுடன் தமது இயலுமைகளை விருத்தி செய்வதன் மூலம் இலங்கையின் விசேட பொருளாதார பிராந்தியமாக உலகளாவிய ரீதியில் போட்டிமிக்க தொழில்முயற்சியாளர் தொகுதியாக இத்தொகுதிகளை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திவருகின்றது. அத்துடன் இத்தொகுதிகளுக்கிடையேயும் நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏனைய தொடர்புபட்ட தொழில்முயற்சியாளர்களுக்கிடையேயும் வியாபாரப் பிணைப்புகளை உருவாக்கிவருகின்றது.

**குறிக்கோள்கள்**

i. சந்தைப்படுத்தல் பிணைப்பின் ஸ்தாபிப்பு
ii. தொழிநுட்ப அபிவிருத்தியும் மாற்றமும்
iii. தொழில் முயற்சி அபிவிருத்தி
iv. நிதியுதவி
v. உட்கட்டமைப்பு அபிவிருத்தி

### 2.5.1 மொறட்டுவை மரத் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

***"சர்வதேச போட்டியுடைய தளபாடம் வீட்டில் தயாரிக்கப்பட்டன"***

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மொறட்டுவைப் பகுதியியை ஓர் முறைசாரா புவியியல் தொகுதியாக இனங்கண்டு அபிவிருத்திப் பங்காளர்களின் உதவியுடன் கைத்தொழில் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் ஏற்கனவே கையேற்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளை விரிவாக்குவதன் மூலம் ஓர் முறைப்படுத்தப்பட்ட தொகுதியை விருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

1. மொறட்டுவை தொகுதியின் அபிவிருத்திக்காக விசேட தரவு அடிப்படை தயாரித்தல்.
2. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சிற்கு விசேட பொருளாதார வலயமாக மொறட்டுவை மரக்கைப்பணி பிரகடனம் மீதான வர்த்தமானி அறிவித்தல்களை வரைதல்.
3. வெவ்வேறு பகுதிகளில் சிறிய அளவில் தளபாடக் கண்காட்சிகளை நடாத்தல்.
4. தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்.

## 2.5.2 தும்புத் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வடமேல் மாகாணத்தின் தும்புத்துறைக் கைத்தொழில் நாட்டிலுள்ள பாரிய போட்டிக்குட்பட்ட வியாபாரங்களில் ஒன்றாகும். 45 சதவீதத்திற்கும் மேற்பட்ட நாட்டின் தெங்கு உற்பத்தி வடமேல் மாகாணத்தில் உள்ளதுடன் நாட்டின் தெங்கு ஆலைகளில் 85 சதவீதமானவை வடமேல் மாகாணத்திலும் மேல் மாகாணத்திலும் இயங்குகின்றன. தென்னம் பொச்சில் இருந்து மூலப்பொருளைப் பெற்றுக்கொள்ளும் இத் தென்னந்தும்புக் கைத்தொழில் உலகச் சந்தையில் போட்டிக்குரிய நிலையை அடைந்துள்ள அதேவேளை உலகச் சந்தைக்கு புதிய போட்டியாளர்கள் பிரவேசித்தல், ஏற்றுமதிக் கட்டளைகளை நிரப்புவதிலுள்ள சிரமங்கள், தும்புகளின் குறைந்த தரம், தென்னந் தும்பின் குறைந்தளவான வழங்கல், மூலப்பொருள் கொண்டுசெல்லல், தொழிநுட்பப் பிரச்சனைகள் மற்றும் காலாவதியான இயந்திரங்கள், உரிய தரப்பினர்களுக்கிடையிலான உறவின் இழப்பு மற்றும் தொழிலுக்கான குறைந்த பங்களிப்பு போன்று சில சவால்களை எதிர்நோக்கியுள்ளது.

**2012 வரையான முன்னேற்றம்**

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நலன் பெறுனர்களுக்கிடையே ஒருங்கிணைப்பை முன்னேற்றுவதற்கு தும்புப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது.

சிறந்த வேலை முறைகள் (GWP) மீதான நான்கு செயலமர்வுகளை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நடாத்தியதுடன் தும்புத் தொழிற்சாலைகளில் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதற்கு சமூகப் பாதுகாப்புச் சபையால் ஓய்வூதிய திட்டத்தை ஊக்குவித்திருந்தது. பல பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 104 தும்பு ஆலை உரிமையாளர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். இதற்கு மேலதிகமாக 80 தும்பு ஆலை உரிமையாயளர்களுக்கு ஊழிய பிரமாணங்கள், வரி மீதான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தும்புத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 269 தும்புசார் உற்பத்தியாளர்களுக்காக தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

### 2.5.3 கைத்தறித் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் “வீட்டில் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணியும் பெருமைமிக்க சமூதாயத்தை உருவாக்குதல்”

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கைத்தறித் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் முறையே பாலமுனை மற்றும் மருதமுனை ஆகிய இடங்களில் கைத்தறித் தொகுதிகளை இவ்வழியில் மேம்படுத்துவதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியது.

1. சந்தைப் பிணைப்புகள்

   தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பாலமுனையிலும் மருதமுனையிலும் கொள்வனவாளர்கள், விற்பனையாளர் கூட்டத்தை நடாத்தியது. இக்கொள்வனவாளர், விற்பனையாளர் கூட்டங்களில் கொழும்பிலிருந்து பதினைந்து கொள்வனவாளர்கள் பங்கேற்றிருந்தனர். உற்பத்தியாளர்களின் தொழில்நுட்ப மற்றும் தொழில்முயற்சித் திறன்களை விருத்தி செய்வதற்காக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்நுட்ப மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மருதமுனை மற்றும் பாலமுனைப் பகுதிகளின் 90 நலன் பெறுனர்களுக்காக நடாத்தியது.

2. தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைக்காக தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.
   தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை புடவை கூட்டுறவு மற்றும் தனியார் துறையில் 57 உத்தியோகத்தர்களுக்காக தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது.

3. 15 பட்டதாரிகளுக்கு நவீன வடிவமைப்பு மீதான தொழில்முயற்சிப் பயிற்சி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு நவீன வடிவமைப்பில் நிபுணத்துவம் வாய்ந்த பட்டதாரிகளை ஊக்குவிக்கப்பட்டிருந்தனர்.

4. நெசவாளர்களுக்கு இயந்திரங்கள் வழங்குதல். மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிப்படைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு 70 கைத்தறி இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இயந்திர வழங்கல் விபரம் :-

| இல. | விபரம் | இயந்திரங்களின் |
|---|---|---|

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கைத்தறி நெசவாளர்கள் (பகுதிகள் - கல்லடி வேலூர், காந்திபுரம், குருக்கள் மடம், கட்டிடத் தொகுதி கல்லடி மஞ்சள் தொடுவாய், புதுக்குடியிருப்பு, துரைநீலாவணை, மான்காடு ஆட்லைன் கல்லடி, இருதயபுரம், பெரிய கல்லாறு, களுதாவளை) | 38 |
| 02 | காத்தான்குடி – பாலமுனை கைத்தறி நெசவாளர்கள் சங்கம், எஸ்.டீ. ஒழுங்கை, அக்பர் டௌன், புதிய காத்தான்குடி – 06 | 13 |
| 03 | சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கம், இல.304 காரியப்பர் வீதி, மருதமுனை – 06 | 04 |
| 04 | துறைநீலாவணை – மருதமுனை – அண்ணா சமூக நிலையம், துறைநீலாவணை தெற்கு 01 | 04 |
| 05 | பிரதேச சபை, கோரளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி | 06 |
| 06 | பிரதேச செயலாளர், கோரளைப்பற்று மத்தி, வாழைச்சேனை | 05 |
| | மொத்த கைத்தறி இயந்திரம் | 70 |

5. கைத்தறிகளின் நுகர்வோர் மதிப்பீடு
தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை "ரன்சலு 2012" இல் நுகர்வோர் மதிப்பீடொன்றை மேற்கொண்டது. கைத்தறிக் கண்காட்சியும் வடிவமைப்புக் காட்சியும் புடவைகள் திணைக்களத்தால் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் தலைமையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது.



6. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கைத்தறி அதிரடிப் படையினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

## 2.6 உபாதிதாரி விவசாயக்க உதானய நிகழ்ச்சித்திட்டம்

***"தொழில் தேடும் பட்டதாரிகளை தொழில் வழங்கும் பட்டதாரிகளாக மாற்றுதல்" – பாரம்பரிய யோசானை முறைமையை பரிமாற்றுதல்"***

தொழில்வாய்ப்பற்ற இளைஞர்களின் போக்கில் தொடர்ச்சியான வளர்ச்சி உள்ளமை ILO இன் புள்ளிவிபரங்கள் காண்பிக்கின்றன. தீர்வுகளில் ஒன்றாக அவர்களை தமது சுய தொழில்முயற்சியில் ஈடுபடச் செய்வதனை ஊக்குவிப்பதனைக் குறிப்பிடலாம். "உபாதிதாரி விவசாய உதானய" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கல்வி கற்ற இளைஞர்களை ஓர் தொழில்முயற்சியில் ஈடுபடுத்தி அவர்களை தொழில் வழங்குனர்களாக ஊக்குவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு தமது இயலுமைகளை முன்னேற்றுவதன் மூலம் வெற்றிபெற்ற தொழில்முயற்சியாளர்களாக விருத்தி செய்வதற்கு விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது.

**குறிக்கோள்கள் :**



i. வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களை கட்டியெழுப்புதல்
ii. வேலை வாய்ப்புகளை வழங்குதல்
iii. வியாபாரத்தில் ஈடுபடுத்துவதற்கு கல்விகற்ற இளைஞர்களை ஊக்குவித்தல்.

**பாரிய நடவடிக்கைகள் :**

1. பட்டதாரிகளுக்காக விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடாத்தல்.
2. விண்ணப்பங்களைச் சேகரித்தலும் நேர்முகப்பரீட்சையின் மூலும் தேர்ந்தெடுத்தலும்.
3. மதிப்பீட்டுத் தேவைப்பாடு
4. மதிப்பீட்டு தேவைப்பாட்டின் மீதான இயலளவு அபிவிருத்தி
   - தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி
   - தொழிநுட்பப் பயிற்சி
   - வெளிப்படுத்தலுக்காகச் செல்லல்
   - தேவைப்பாடுகள் சார்ந்த ஏனைய பயிற்சிகள்
5. நிதித் தேவைப்பாடுகளுக்கு உதவுதல்
6. பின் தொடர் மற்றும் வியாபார ஆலோசனைகள்



ஆரம்ப கட்டத்தில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 26 பட்டதாரிகளை வயம்ப பல்கலைக்கழகத்திலிருந்து தேர்ந்தெடுத்து தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சியை வழங்கியது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பட்டதாரிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

சந்தைப்படுத்தல், தொழிநுட்ப மாற்றம் வியாபார ஆலோசனை போன்ற பின்தொடர் சேவைகள் பல்கலைக்கழகங்களின் தொழில்துறை வழிகாட்டல் பிரிவின் உதவியுடன் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொள்ள உள்ளது.

## 2.7 உள்ளூர் ஊதுபத்திகளின் தயாரிப்பை ஊக்குவித்தல்

இலங்கை வருடாந்தம் ரூபா 300 மில்லியன் பெறுமதியான ஊதுபத்திகளை இறக்குமதி செய்கின்றதென்பதனை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஆராய்ந்து அறிந்துள்ளது. சுங்கத் திணைக்களத்தின் இறக்குமதிப் புள்ளிவிபரங்களின் படி பிரதானமாக இந்தியாவிலிருந்தும் சிறிதளவானவற்றை தாய்லாந்தில் இருந்தும் இறக்குமதி செய்கின்றது. ஊதுபத்தித் தயாரிப்பு இலங்கையின் சுய தொழிலுக்கு ஏறத்தாழ 25,000 பேருக்கு பங்காற்றியிருக்க முடியும். நாட்டில் ஊதுபத்தி உற்பத்தியை உயிர்ப்பிக்குமுகமாக அரசாங்க, தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் அடங்கிய நலன் பெறுனர்களின் செயலமர்வுத் தொடர்களை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நடாத்தியது.

### இறக்குமதிக் கட்டுப்பாடு

இறக்குமதி செய்யப்படும் ஊதுபத்திகளுக்கு வரியை விதிப்பதுடன் தற்போது இறக்குமதி செய்யப்படும் ஊதுபத்திகளின் தலா ஒவ்வொரு கிலோ கிராமிற்கும் ரூபா 500 வீதம் வரி வதிக்கப்படுகின்றது.



### மூலப்பொருட்களின் பற்றாக்குறை

ஊதுபத்திகளைத் தயாரிப்பதற்கான பிரதான மூலப்பொருளில் ஒன்றாக மூங்கில் அமைந்த போதிலும், மூங்கில் சுற்றாடல் ரீதியாக பெறுமதிமிக்க ஓர் தாவரமாக இருப்பதனால்

இதனை வெட்டிக் கொண்டு செல்வதும் பிரச்சனைக்குரியதாக உள்ளது. பெரும்பாலான ஊதுபத்தி உற்பத்தியாளர்கள் மத்திய மாகாணத்தைச் சார்ந்தே உள்ளனர். ஆகவே, குறுங்காலத் தீர்வாக ஊதுபத்தி உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு தனியார் தோட்டங்களிலிருந்து மூங்கிலை வெட்டுவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

பதுளை மாவட்ட மகளிர் சங்கத்திடமிருந்தான ஓர் வேண்டுகோளில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஊதுபத்தித் தயாரிப்புத் தொழில்நுட்பப் பயிற்சி ஒன்றை நடாத்தியதுடன் 28 பங்கேற்பாளர்கள் சமூகமளித்திருந்தனர்.

## 2.8 தொழிநுட்ப அபிவிருத்தி நிதியம்

தமது நிறுவகங்களை ஆரம்ப கட்டத்திலிருந்து வளர்ச்சி நிலைக்கும், விஸ்தரிப்பு மற்றும் சர்வதேச மயமாக்கல் நிலைக்கும் விருத்தி செய்வதற்காக தொழில்முயற்சியாளர்களுக்கு தொழிநுட்ப உதவி வழங்குவதற்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டிருந்தது. பின்வருவனவற்றிற்காக தொழிநுட்ப மற்றும் நிதி உதவி வழங்குவதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டிருந்தது.

i. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களால் தயாரிக்கப்படும் உற்பத்திகளுக்கு உற்பத்தித் தரத்தையும் பெறுமதி சேர்ப்பனவையும் மேம்படுத்துவதற்கு உதவுதல்.

ii. இறக்குமதி செய்யப்பட்ட தொழிநுட்பத்தின் சேர்க்கைக்கு வசதியளித்தல்.

iii. செயற்பாட்டு தொழிநுட்ப அபிவிருத்திக்கான உதவி

iv. தொழிநுட்ப உதவி வழங்கலின் மூலம் தொழிநுட்ப அறிவுத் திறன் வாய்ந்த தொழில்முயற்சியாளர்கள்.

இலங்கையில் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் (TDF) ஒன்றைத் தாபிப்பதற்காக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றைத் தயாரித்து அதனை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிற்கு சமர்ப்பித்துள்ளது. இதன் விளைவாக, தொழிநுட்பப் பரிமாற்றத்தினூடாக ஆய்வினை வர்த்தகமயமாக்குவது தொடர்பான ஒரு செயற்குழு தாபிக்கப்பட்டது. அதே சமயம் மலேசிய தொழிநுட்ப அபிவிருத்திக் கூட்டமைப்பிடமிருந்து (MTDC) தொழிநுட்ப உதவியை பெறும் சாத்தியத் தன்மை குறித்து தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஆராய்ந்தது.

## 2.9 தொழிநுட்ப மாற்றம்

உலகளாவிய வியாபாரச் சூழலில் இறுதியாக அவர்களுக்கு போட்டித் தன்மையை எதிர்கொள்ளும் வகையிலும் அவர்களது உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துமுகமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு பரவலானதும் புதுமையானதுமான தொழிநுட்பங்களின் வினையூக்கியாக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பெரும்பங்கை வகிக்கின்றது.

2012 இல் இதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஒமேகா 3 Fatty Acids கொண்ட முட்டைகள் தயாரிப்பின் மீதான தொழிநுட்பத்தை முதல் முயற்சியாக மேற்கொண்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தில் கைத்தொழில் தொழிநுட்பத்தால் கண்டுபிடிக்கப்பட்ட மேற்குறித்த தொழிநுட்பம் வெலிகந்த தனியார் வரையறுக்கப்பட்ட ஆரோக்யா பண்ணைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. நுகர்விற்கு உடலில் உள்ள சிறந்த கொழுப்புச் சத்தின் அளவை அதிகரிக்கும் ஒமேகா 3 Fatty Acids களின் உயர் அளவைக் கொண்ட முட்டைகளில் சிறந்த கொழுப்புத் தன்மையை விருத்தி செய்யும் புதிய கூறு சேர்க்கப்பட்டதாகும். இத் தொழிநுட்பம் முட்டைகளின் போசாக்கு தன்மையை அதிகரிப்பதற்கு மலேசியா போன்ற நாடுகளில் ஏற்கனவே பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

## 2.10 இலத்திரனியல் ஊடகத்தினூடாக நிறுவகக் கல்வி (ரூபவாஹினிக் கல்வி நிகழ்ச்சி)




ஆரம்பம் தொட்டே தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இப் பாரிய துறையை முன்னேற்றுவதற்கு பல்வேறு நடைமுறைகளைக் கையாண்டுள்ளது. இலத்திரனியல் ஊடகத்தினூடாக தொழில் முயற்சிக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கியுள்ளது. இந் நிகழ்ச்சி ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நடாத்தப்படுவதுடன் இது 30 நிமிட நிகழ்ச்சியாகும்.

**நிகழ்ச்சிக் குறிக்கோள்கள் :**

1. தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குனர்களுக்கு வியாபாரத் தகவல்களை வழங்குதல்.

2. தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குனர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்தல்.

3. தொழில் முயற்சியாளர்களுக்கிடையே தொழில் முயற்சிப் பண்பாட்டையும் எண்ணத்தையும் விருத்திசெய்தல்.

4. தொழிநுட்ப மாற்றம்.

5.

6. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் சேவைகளை ஊக்குவித்தல்.

7. வெவ்வேறு துறைகளில் வியாபார அறிவை ஊக்குவித்தல்.

8. தொழில் முயற்சியாளர்களால் எதிர்நோக்கிய வியாபாரப் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் (தொழில் முயற்சியாளர்கள் தமது வியாபாரப் பிரச்சனைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது).

## 2.12 "தேசத்திற்கு மகுடம்" தேசிய கண்காட்சி



தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் கலந்து கொண்டதுடன் ஓர் கூடத்தையும் ஒழுங்குபடுத்தியிருந்தது. 2013 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை விரும்பியது.



## 2.13 திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டம்

திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடிசைக் கைத்தொழில் தொகுதி ஊக்குவிப்பிற்கான கண்காட்சியை திவிநெகும பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் ஒழுங்கு செய்கின்றன. இக் கண்காட்சிக்கான பங்களிப்பிற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தேசிய தொழில் முயற்சி அபவிருத்தி அதிகாரசபையை அழைத்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் பின்வருமாறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தேசிய தொழில் முயற்சி அபவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டது.

| | **மாவட்டம்** | **பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 02 | அநுராதபுரம் | 9 |
| 03 | யாழ்ப்பாணம் | 19 |
| 04 | கேகாலை | 125 |
| 05 | கம்பஹா | 22 |
| 06 | மொனறாகலை | 05 |
| 07 | புத்தளம் | 16 |
| 08 | மன்னார் | 99 |
| 09 | கண்டி | 88 |
| 10 | அம்பாந்தோட்டை | 352 |
| 11 | இரத்தினபுரி | 183 |
| 12 | பொலன்னறுவை | 212 |
| 15 | மாத்தளை | 43 |
| 17 | பதுளை | 61 |
| 18 | காலி | 251 |
| | மொத்தம் | 1485 |

ஊதுபத்திகளின் உற்பத்தி மீது கொழும்பில் 52 நலன்பெறுனர்களுக்கு தொழிநுட்பப் பயிற்சி வழங்கப்பட்டது.

மேலதிகமாக நலன்பெறுனர்களுக்கான நிதி உதவி மற்றும் இயந்திரங்கள்/ உபகரணங்களிற்காகவும் ஒருங்கிணைப்பில் தேசிய தொழில் முயற்சி அபவிருத்தி அதிகாரசபை ஈடுபடுகின்றது. இதன்படி, யாழ்ப்பாணம், கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களின் வங்கி செயற்பாடுகளுக்கும் நலன்பெறுனர்கள் வழிநடத்தப்பட்டனர். புத்தளம், கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களில் 19 நலன்பெறுனர்களுக்காக உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## 2.14 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் உதவிச் சேவைகள்

**தொழிநுட்ப அபிவிருத்திச் சேவை நிலையங்களின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் உதவிச் சேவைகள்**

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் மீது ஓர் விசேட கவனத்துடன் தேசிய தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டையும் அபிவிருத்தியையும் வழங்குவதற்காக தொழிநுட்ப அபிவிருத்திச் சேவை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

- புதிய வியாபார ஆக்கம் அல்லது விஸ்தரிப்பு
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் தரவு அடிப்படை
- பிராந்தியங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான வியாபார ஆலோசனை
- வியாபாரத் திட்டத் தயாரிப்பு
- நிதிப்பெறுகை வழிகளை முன்னேற்றுதல்.
- ஓரக வியாபாரக் குழு (மையம்) ஸ்தாபிப்பு
- தொகுதி அபிவிருத்தி

# தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

## 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்று

லெவல் 02, வெஸ்ட் விங்,

சிலிங்கோ ஹௌஸ்,

இல. 69,

ஜனாதிபதி மாவத்தை,

கொழும்பு 01.

neda@sltnet.lk

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|---|
| **நிகழ்ச்சித்திட்ட மானியங்களின் பயன்பாடு** | | | |
| ஆண்டிற்காக உடமையாக்கத்தக்க மானியம் | 16 | 15,275,239 | 19,328,779 |
| நிகழ்ச்சித்திட்டச் செலவினங்கள் | 9 | 15,275,239 | 19,328,779 |
| | | - | - |
| **செயற்பாடு** | | | |
| பொதுத் திறைசேரிக்கான மீண்டெழும் மானியம் | | 20,075,000 | 19,464,000 |
| அரசாங்க மானியத்தின் காலக்கழிவு | 14 | 4,093,002 | 2,002,697 |
| ஏனைய வருமானம் | 7 | 57,359 | 126,526 |
| **மொத்த வருமானம்** | | **24,225,361** | **21,593,223** |
| நிர்வாகச் செலவினங்கள் | 8 | 26,275,440 | 20,884,686 |
| மொத்தச் செலவினங்கள் | | **26,275,440** | **20,884,686** |
| **ஆண்டிற்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)** | | **(2,050,079)** | **708,537** |

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா | 2011 சனவரி 01 இல் உள்ளவாறு<br>ரூபா |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | **10** | 20,662,895 | 7,042,647 | 3,279,316 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பெறவேண்டியவைகள் | **11** | 228,653 | - | - |
| வைப்புகளும் முற்பணங்களும் | **12** | 857,380 | 1,043,180 | 85,000 |
| முற்பணச் செலவினங்கள் | **13** | 78,561 | 84,165 | - |
| விழா முற்பணங்கள் | | 23,500 | 12,000 | 11,000 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | | 81,509 | 1,998,625 | 1,937,087 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | **1,269,603** | **3,137,970** | **2,033,087** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **21,932,498** | **10,180,617** | **5,312,403** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | | |
| **உரிமை மூலதனம்** | | | | |
| திரண்ட மிகை | | 698,248 | 2,748,327 | 2,039,791 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **698,248** | **2,748,327** | **2,039,791** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | | |
| அரசாங்க மானியம் | **14** | 18,951,965 | 5,644,967 | 2,147,664 |
| இளைப்பாறல் கடன் கடப்பாடு | **15** | 199,368 | 149,027 | 102,638 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | **19,151,333** | **5,793,994** | **2,250,302** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| நிகழ்ச்சித்திட்டத்திற்கான மானியம் | **16** | 38,407 | 788,646 | 592,424 |

| | | | |
|---|---|---|---|
| அட்டுறு செலவினங்கள் | 2,044,510 | 849,650 | 429,887 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | **2,082,917** | **1,638,296** | **1,022,311** |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | **21,932,498** | **10,180,617** | **5,312,403** |

05 முதல் 23 ஆம் பக்கங்கள் உள்ள குறிப்புகள் இந் நிதிக்கூற்றுக்களின் உள்ளாந்த ஓர் பகுதியாக உள்ளது.

அதிகாரசபையின் இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உள்ளன என்பதனை நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

……………..

**கணக்காளர்**

**ஒப்பம் :**

**…………………..**

**என்.எம்.சஹீட்**

**தலைவர்/ பணிப்பாளர் நாயகம்**

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பணத்திற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பானது.

பணிப்பாளர் சபையின் சார்பிலும் அவர்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**…………………..**

**எம்.ஏ.தாஜுதீன்**

**பணிப்பாளர்**

**………………..**

**ரீ.என்.ஓசன்**

**பணிப்பாளர்**

## 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றக் கூற்று

| | திரண்ட மிகை 2012 | மொத்தம் 2011 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி ((முன்னர் குறிப்பிடப்பட்டவாறு)** | **(4,948,496)** | **(4,948,496)** |
| **எஸ்எல்எப்ஆர்எஸ் முதலாம் கடைப்பிடிப்பிலான தாக்கம்** | 6,988,286 | 6,988,286 |
| **2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி (மீள் தயாரிப்பு)** | **2,039,791** | **2,039,791** |
| ஆண்டிற்கான தேறிய மிகை | 708,537 | 708,537 |
| **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **2,748,327** | **2,748,327** |
| ஆண்டிற்கான தேறிய பற்றாக்குறை | (2,050,079) | (2,050,079) |
| **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **698,248** | **698,248** |

**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று**

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆண்டிற்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (2,050,079) | 708,537 |
| ***சீராக்கங்கள்:*** | | |
| பெறுமானத் தேய்வு | 4,427,047 | 1,517,032 |
| அரசாங்க மானியத்தின் காலக்கழிவு | (4,093,002) | (2,002,697) |
| ஆண்டிற்காக விதிக்கப்பட்ட பணிக்கொடை | 50,341 | 46,389 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **(1,665,693)** | **269,261** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| பெறவேண்டியவை | (228,653) | - |
| வைப்புகள் மற்றும் முற்பணங்கள் | 185,800 | (958,180) |
| முற்கொடுப்பனவுச் செலவினங்கள் | 5,604 | (84,165) |
| விழா முற்பணம் | (11,500) | (1,000) |
| நிகழ்ச்சித்திட்டத்திற்கான மானியம் | (750,239) | 196,221 |
| அட்டுறு செலவினங்கள் | 1,194,860 | 419,763 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு** | **(1,269,821)** | **(158,100)** |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(1,269,821)** | **(158,100)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதன, பொறி, உபகரணங்களின் கொள்வனவு | (18,047,295) | (5,280,363) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(18,047,295)** | **(5,280,363)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| பெறப்பட்ட அரச மானியம் | 17,400,000 | 5,500,000 |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **17,400,000** | **5,500,000** |
| **காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் தேறிய மாற்றங்கள்** | **(1,917,116)** | **61,538** |
| **ஆண்டின் ஆரம்பத்திலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | 1,998,625 | 1,937,087 |
| **ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **81,509** | **1,998,625** |

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

# 1. கூட்டமைப்புத் தகவல்

### 1.1 பொது

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 2006 மே 19 அன்று 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டது.

### 1.2 மூல நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் அமைப்புகளுகிடையே விசேட வலுப்படுத்தலுடன் இலங்கையில் தொழில் முயற்சி அபிவிருத்தியை மேம்படுத்தி, உதவி வழங்கி, ஊக்குவிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டது.

### 1.3 நிதியாண்டு

அதிகாரசபையின் நிதி அறிக்கைக் காலப்பகுதி திசெம்பர் 31 இல் முடிவுறுகின்றது.

### 1.4 பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

அதிகாரசபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் லெவல் 02, வெஸ்ட் விங், சிலிங்கோ ஹௌஸ், இல. 69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

### 1.5 வழங்கலுக்காக அங்கீகரிக்கப்பட்ட திகதி

2013 யூலை 31 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி, அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் வழங்கலுக்காக அங்கீகரிக்கப்பட்டது.

# 2. நிகழ்ச்சித்திட்டத் தகவல்கள்

### 2.1.1 தேசிய தொழில் முயற்சி மக்கள் மன்றம்

வியாபார சமூகங்கயின் வேறுபட்ட மட்டங்களிலான தொடர்பிற்காகவும் சிறந்த ஒருங்கிணைப்பிற்காகவும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நிறுவகக் கட்டமைப்பை மேம்படுத்துகின்றது. தேசிய தொழில் முயற்சி மக்கள் மன்றம் (NEF)

பல்வேறுபட்ட நலன்பெறுனர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் உயர் மட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டதாகும். தேசிய ரீதியாக இனங்காணப்பட்ட வியாபாரப் பிரச்சனைகளும் கட்டமைப்பில் கீழ் மட்டங்களில் தீர்க்கப்படாத பிரச்சனைகளும் தேசிய தொழில் முயற்சித் தொடரில் கலந்தாலோசிக்கப்படுகின்றன. பதினொரு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 2.1.2 மாவட்ட தொழில் முயற்சி மக்கள் மன்றம்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கூட்டிணைப்புத் திட்டத்தின் படி, தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்தி சேவைகளை வழங்குவதற்கு மாவட்ட தொழில் முயற்சி மக்கள் மன்றங்களின் (DEF) ஸ்தாபிப்பையும் இது உள்ளடக்கியுள்ளது. மாவட்ட தொழில் முயற்சி மக்கள் மன்றங்கள் மாவட்ட மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டு மாவட்டத்திலுள்ள அரசாங்க மற்றும் அரச சார்பற்ற வியாபார அபிவிருத்திச் சேவைகளையும் சம்மேளனங்கள், வியாபார மற்றும் வர்த்தக அமைப்புகளையும் உள்ளடக்கியுள்ளது.

### 2.1.3 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் வழிகாட்டல் நூல்

2012 இன் முதல் காலாண்டில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தேசிய மட்டத்தில் வழிகாட்டல் நூல் வெளியீட்டு நிகழ்ச்சித்திட்டத்தையும் பிராந்திய வெளியீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை கொழும்பு, மாத்தளை, அனுராதபுரம், இரத்தினபுரி, பதுளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடாத்தியுள்ளது.

## 2.2 தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இணையதளம்

தற்போது பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன.

i. வழிகாட்டல் நூலின் இலத்திரனியல் வடிவம்

ii. கொள்கை ஆவணங்கள் மற்றும் கொள்கை மீளாய்வு முறைமை

iii. தொழில் முயற்சி அபிவிருத்தியின் விடயத்தை கற்பிக்கும் ஒளித்தொகுப்புக்கள்

iv. சம்மேளனம் குறித்த தகவல்கள்

v. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்முயற்சி அபிவிருத்திக் கண்டுபிடிப்புகள்.

vi. செய்திகள்.

vii. மாதிரி வியாபாரத் திட்டம்.

## 2.3 "கமட்ட ஒபின" வியாபார நிகழ்ச்சித்திட்டம்

### தொழில் முயற்சி வடிவ அபிவிருத்தி

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, அதன் ஆரம்பம் முதல் இத்துறையை முன்னேற்றுவதற்குப் பல வழிமுறைகளைக் கையாண்டுவருகின்றது. நாட்டின் பிராந்தியங்களில் குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையை முன்னேற்றுவதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டு கிராமிய மட்டத்தில் வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு "கமட ஒபின வியாபார" என அது பெயரிடப்பட்டுள்ளது. மஹிந்த சிந்தனை முன்னோடியின் படி, நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையை முன்னேற்றுவதற்காக விசேட திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


இத்திட்டம் மூன்று பெருங்கூறுகளைக் கொண்டமைந்துள்ளது.

i. தரப்பட்ட புவியியல் பகுதியில் போட்டியான வியாபாரத் துறையின் அபிவிருத்திக்கான (மாவட்ட மட்டப் படிமுறையில்) பிரச்சனைகளையும் தீர்வுகளையும் போட்டியான வியாபாரச் சந்தர்ப்பங்களையும் இனங்கண்டு கொள்ளல்.

ii. தொழில்முயற்சி வடிவ அபிவிருத்தி.

iii. நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் படியால் தீர்மானிக்கப்பட்ட துறை அபிவிருத்தித் தீர்மானங்களின் அமுலாக்கம்.

## அமுலாக்கல் நடைமுறை :




## 2.4 "உபாதிதாரி விவசாயக்க உதானய" நிகழ்ச்சித்திட்டம்

பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு அவர்களது இயலுமைகளை முன்னேற்றுவதன் மூலம் வெற்றிபெற்ற தொழில்முயற்சியாளர்களாக விருத்தி செய்வதற்கு ஓர் விசேட நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. மென்திறன்களின் விருத்திக்கும் தொழில்முயற்சிக் கல்வி மேம்பாட்டிற்கு மேலும் வலுவூட்டுவதற்கு தேவைப்படுகின்றது. தேர்வு மற்றும் கண்காணிப்பிற்கு உதவியைப் பெறும் வகையில் பல்கலைக்கழகங்களின் தொழில்சார் வழிகாட்டல் பிரிவுகளின் உதவியுடன் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

ஆரம்ப கட்டத்தில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை வயம்ப பல்கலைக்கழகத்தில் இந் நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கு தீர்மானித்திருந்ததுடன்

இந் நிகழ்ச்சித்திட்டம் பின்வருமாறு சில படி முறைகளைக் கொண்டமைந்தது. பல்கலைக்கழகங்களின் தொழில்சார் வழிகாட்டல் பிரிவு பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்காக இந் நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கு உடன்பட்டுள்ளது.

i. விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்
ii. நலன்பெறுனர்களின் தெரிவு
iii. தேவை மதிப்பீடு
iv. தேவை மதிப்பீடு மீதான இயலளவு அபிவிருத்தி
v. நிதி உதவி
vi. பின்தொடர் மற்றும் வியாபார நெறிப்படுத்தல்

## 2.5 வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களை வலுப்படுத்தலும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேசிய பெயர் விபரக்கொத்தின் தயாரிப்பும் வெளியீடும்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கூட்டிணைந்த திட்டத்தின் படி, வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேசிய விபரக்கொத்தின் தயாரிப்பையும் வெளியிடலையும் இது உள்ளடக்கியுள்ளது. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் செயற்பாட்டிலுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான பாரிய பங்கைக் கொண்டிருக்கிறார்கள். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறை அபிவிருத்தியில் வெவ்வேறுபட்ட வகையிலான வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் ஈடுபடுகின்றனர். குறிப்பாக சந்தைப்படுத்தல், தொழிநுட்ப அபிவிருத்தி மற்றும் மாற்றம், நிதியீட்டம், தொழில் முயற்சி அபிவிருத்தி, தகவல் தொழிநுட்பம் முதலியவற்றிற்கு உதவியளிக்கின்றது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை ஐந்து படிமுறைகளில் மேற்கொள்கின்றது.

6. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களைப் பதிவு செய்தல்.

7. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேசிய பெயர் விபரக்கொத்தின் தயாரிப்பு (கணனிப் பதிவு).

8. தேசிய பெயர் விபரக்கொத்தின் வெளியீடு.

9. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேவைப்பாட்டு மதிப்பீடு.

10. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களை வலுப்படுத்தல்.

## 2.6 பொருளாதார வலயம் - நிலைப்படுத்தலுக்காக தற்போதைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் தொகுதிகளை மீள்வடிவமைத்தல்.

கூட்டிணைந்த திட்டத்தின் படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் தொகுதிகளும் ஏனைய நடவடிக்கைகளில் நிகழ்ச்சித்திட்டங்களை பின்வரும் பகுதிகளில் நடாத்திருந்தன.

### 2.6.1 தும்புத் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

தும்புத் தொழிற்சாலைகளில் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதற்கு சமூகப் பாதுகாப்புச் சபையால் ஓய்வூதிய திட்டத்தை ஊக்குவித்திருந்தது. சிறந்த வேலை நடைமுறை மீது நான்கு செயலமர்வுகளை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நடாத்தியிருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டு தும்புத் தொழிற்சாலை உரிமையாளர்களைத் திருப்திப்படுத்தியுள்ளது. நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **இடம்** | **தும்புத் தொழிற்சாலை உரிமையாளர்கள்** |
|---|---|
| வென்னப்புவ | 25 |
| பிங்கிரிய | 29 |
| குருநாகல் | 26 |
| மொத்தம் | 80 |

### 2.6.2 மொறட்டுவை மரத் தொகுதி - *வீட்டில் தயாரிக்கப்படும் சர்வதேச போட்டியுடைய தளபாடம்*

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மொறட்டுவைப் பகுதியியை ஓர் முறைசாரா புவியியல் தொகுதியாக இனங்கண்டு அபிவிருத்திப் பங்காளர்களின் உதவியுடன் கைத்தொழில் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் ஏற்கனவே கையேற்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளை விரிவாக்குவதன் மூலம் ஓர் முறைப்படுத்தப்பட்ட தொகுதியை விருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மொறட்டுவை மரக்கைப்பணிச் சங்கத்தினூடாக தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியிருந்தது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மொறட்டுவை மரக்கைப்பணி சங்கத்தின் உதவியுடன் நலன்பெறுனர்களைத் தேர்ந்தெடுத்து 25 நலன் பெறுனர்களுக்கான தொழில்முயற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது. அத்துடன் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மரவேலைகளில் ஈடுபடும் 25 தொழில்முயற்சியாளர்களுக்கு இயந்திரங்களையும் உபகரணங்களையும் வழங்கியிருந்தது.

### 2.6.3 கைத்தறித் தொகுதி - வீட்டில் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணியும் பெருமைமிக்க சமூதாயத்தை உருவாக்குதல்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கைத்தறித் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பின்வருமாறாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தியுள்ளது.

1. தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைக்காக தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.
2. நெசவாளர்களுக்கான தொழில் முயற்சிப் பயிற்சி (வியாபாரத் திட்டங்கள், கணக்கீட்டு முறைமைத் தயாரிப்பு)
3. தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு நவீன வடிவமைப்பில் நிபுணத்துவம் வாய்ந்த பட்டதாரிகளை மேம்படுத்தல்.

புடவைத்துறைப் பட்டதாரிகளுக்காக வடிவமைப்புக் கல்விக் கூடம் மற்றும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் தொழில் முயற்சிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. 15 பயிலுனர்கள் பங்கேற்றிருந்தனர். புடவைக் கூட்டுறவு மற்றும் தனியார் துறையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்காகவும் இப் பயிற்சி வழங்கப்பட்டது.

| **இடம்** | **பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| குருநாகல் | 22 |
| கொழும்பு | 15 |
| மாத்தறை | 12 |
| மொத்தம் | 59 |

### 2.6.4 வியாபார அபிவிருத்தி சேவைக் கண்காட்சிகள்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கூட்டிணைந்த திட்டத்தின் படி (தொடர்பு இல. 3.4.1) பிராந்திய மட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் வியாபார வர்த்தகக் கண்காட்சிகளும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர் சேவைக் கண்காட்சிகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நாட்டிலும் பிராந்தியங்களிலும் கிடைக்கப்பெறும் வியாபார அபிவிருத்திச் சேவைகள் குறித்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களில் பலர் தெரிந்து கொண்டிராமையை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இனங்கண்டுள்ளது. ஆகவே வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களிடமிருந்து உயர் நலனைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர். தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கும் இடையிலான இவ் இடைவெளியை நிரப்பும் வகையில் வலுவான பிணைப்பும் ஒருங்கிணைப்பும் உருவாக்கப்பட வேண்டும். வியாபார சேவை வர்த்தகக் கண்காட்சிகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்பி தற்போதுள்ள வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் இயலுமையை மேம்படுத்தி அவர்களின் போட்டித் தன்மையை முன்னேற்றுதல்.

**நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்கள்**

iv. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கிடையிலான இடைவெளியை இணைத்தல்.

v. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் அபிவிருத்திக்கான வியாபார வலையமைப்பை விருத்தி செய்தல்.

vi. பிராந்தியத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களில் உற்பத்திகளை ஊக்குவித்து சந்தைப் பிணைப்பை உருவாக்குதல்.

2012 இல் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை குருநாகல், மட்டக்களப்பு, மன்னார் மற்றும் அநுராபுர மாவட்டங்களில் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர் கண்காட்சிகளை நடாத்தியுள்ளது.

### 2.6.5 "தேசத்திற்கு மகுடம்" தேசிய கண்காட்சி – 2012 மற்றும் 2013

2012 ஆம் ஆண்டின் போது அநுராதபுரத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கலந்து கொண்டது.

2013 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை விரும்பியது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக பின்வரும் நடவடிக்கைகளைத் திட்டமிட்டிருந்தது.

01. மேற்குறித்த ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரேவகையான தற்போதுள்ள அல்லது புதிய வியாபாரக் குழுக்களைத் தேர்ந்தெடுத்து (ஒரு மாவட்டத்திலிருந்து 30) வியாபார முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்கியது. (ஒரு மாவட்டத்திற்கு ஒரு நிகழ்ச்சி) பிரதேச செயலகத்தின் ஏனைய வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களாலும் தேர்வுகள் இடம்பெற்றன.

02. அவர்களது நிதித்தேவைப்பாடுகளுக்காக நிதிநிறுவகத்துடனான தொடர்பு

03. பிராந்தியத்திலுள்ள வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் உதவியுடன் பின்தொடர் சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

04. கண்காட்சியில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கூடமொன்றை ஒழுங்கு செய்து மேற்குறித்த நலன்பெறுனர்களுக்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கூடத்தில் தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கு (தேர்ந்தெடுக்கப்பட்ட) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மேலதிகமாக, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்த இயந்திர உற்பத்தியாளர்களுக்கு கண்காட்சியில் அவர்களது இயந்திரங்களைக் காட்சிப்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

### 2.6.6 "திவிநெகும" தேசிய நிகழ்ச்சித்திட்டம்

திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடிசைக் கைத்தொழில் தொகுதி ஊக்குவிப்பிற்கான கண்காட்சியை "திவிநெகும" பொருளாதார அபிவிருத்தி அமைச்சும்

பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் ஒழுங்கு செய்கின்றன. இக் கண்காட்சிக்கான பங்களிப்பிற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தேசிய தொழில் முயற்சி அபவிருத்தி அதிகாரசபையை அழைத்துள்ளது.

இவ்வாண்டின் பாரம்பரிய கைத்தொழில்கள் அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்ட சகல கண்காட்சிகளிலும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பங்கேற்றிருந்தது. அத்துடன் "திவிநெகும" நலன்பெறுனர்களுக்கான பயிற்சி மற்றும் வசதிவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் தேசிய தொழில் முயற்சி அபவிருத்தி அதிகாரசபையும் ஈடுபட்டது. 2012 ஆம் ஆண்டில் பின்வருமாறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தேசிய தொழில் முயற்சி அபவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டது.

## 2.7 தொழிநுட்ப அபிவிருத்தி நிதியம்

இலங்கையில் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் (TDF) ஒன்றைத் தாபிப்பதற்காக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றைத் தயாரித்து அதனை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிற்கு சமர்ப்பித்துள்ளது. இதன் விளைவாக, தொழிநுட்பப் பரிமாற்றத்தினூடாக ஆய்வினை வர்த்தகமயமாக்குவது தொடர்பான ஒரு செயற்குழு தாபிக்கப்பட்டது. அதே சமயம் மலேசிய தொழிநுட்ப அபிவிருத்திக் கூட்டமைப்பிடமிருந்து (MTDC) தொழிநுட்ப உதவியை பெறும் சாத்தியத் தன்மை குறித்து தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஆராய்ந்தது. மலேசிய தொழிநுட்ப அபிவிருத்திக் கூட்டமைப்பு இலங்கையில் தொழிநுட்ப அபிவிருத்தி நிதியத்தை தாபிப்பதன் சாத்தியத் தன்மையைப் பரிசீலிக்கும் பிரேரனை ஒன்றை சமர்ப்பித்தது. அதனை அடுத்து அது செயற்குழு பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் நலன் பெறு அமைப்புகளிலிருந்து 19 உத்தியோகத்தர்களுக்காக மலேசியாவில் தொழிநுட்ப வர்த்தகமயமாக்கலின் விழிப்புணர்ச்சியை வழங்கும் நோக்கில் மலேசிய தொழிநுட்ப அபிவிருத்திக் கூட்டமைப்பால் மலேசியாவில் நடாத்தப்பட்ட ஓர் செயலமர்விற்கும் ஐந்து நாள் வெளிப்படுத்தலில் கலந்துகொள்வதற்காகவும் இலங்கையில் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு மலேசிய தொழிநுட்ப அபிவிருத்திக் கூட்டமைப்பு அனுசரணை வழங்கியிருந்தது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலைக்கு வருவதற்கு மலேசியா முயற்சிகளை எடுத்து வருகின்றது. இப் பங்கேற்பில் கலந்துகொள்ளும் நலன்பெறும் நிறுவனங்களைக் கொண்ட ஓர் குழுவுடனான பரிந்துரைக்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தயாராகி வருகின்றது.

## 2.8 இலத்திரனியல் ஊடகத்தினூடாக நிறுவகக் கல்வி (ரூபவாஹினிக் கல்வி நிகழ்ச்சி)

ஆரம்பம் தொட்டே தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இப் பாரிய துறையை முன்னேற்றுவதற்கு பல்வேறு நடைமுறைகளைக் கையாண்டுள்ளது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 2012 இன் செயற்பாட்டுத் திட்டத்தின் படி, இலத்திரனியல் ஊடகத்தினூடாக தொழில் முயற்சிக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தது. ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துடன் ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகள் நிறைவேறியுள்ளன. பேச்சுவார்த்தைப் படி, இது 30 நிமிட நிகழ்ச்சியாக மாதம் ஒரு முறை ஒளிபரப்பப்பட உள்ளது. குறித்த தலைப்புகளில் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் பங்கேற்புடன் ஓர் குழு உரையாடலாக இந் நிகழ்ச்சி திட்டமிடப்பட்டுள்ளது. (உதாரணமாக: வியாபாரப் பதிவு, பொருளின் தரம், சந்தைப்படுத்தல், உற்பத்தி மேம்பாடு) குறித்த நிறுவகங்களும் உத்தியோகத்தர்களும் இக் குழு உரையாடலின் போது கலந்துகொள்கின்றனர். (அரசாங்க மற்றும் அரசசார்பற்ற தனியார்) நாட்டின் பிராந்தியப் பகுதிகளில் உள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு உதவக் கூடிய தகவல்கள் மற்றும் முன்னணி நிறுவக வாய்ப்புகள் பற்றிய குறுக்கு வெட்டு தகவல்களைப் பெறக்கூடிய சிறந்த தருணமாக இது கருதப்படுகின்றது.

**நிகழ்ச்சிக் குறிக்கோள்கள்** :

9. தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குனர்களுக்கு வியாபாரத் தகவல்களை வழங்குதல்.

10. தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குனர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்தல்.

11. தொழில் முயற்சியாளர்களுக்கிடையே தொழில் முயற்சிப் பண்பாட்டையும் எண்ணத்தையும் விருத்திசெய்தல்.

12. தொழிநுட்ப மாற்றம்.

13. வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் சேவைகளை ஊக்குவித்தல்.

14. வெவ்வேறு துறைகளில் வியாபார அறிவை ஊக்குவித்தல்.

15. தொழில் முயற்சியாளர்களால் எதிர்நோக்கிய வியாபாரப் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் (தொழில் முயற்சியாளர்கள் தமது வியாபாரப் பிரச்சனைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது).

இலத்திரனியல் ஊடகத்தினூடாக வியாபாரத் தகவல்களும் வியாபார அறிவும் தொழில் முயற்சியாளர்களை விரைவாகவும் ஆக்கபூர்வமாகவும் சென்றடையும். குழு கலந்துரையாடல் மூலம் விடய ஆய்வுகள், கள அவதானிப்புகள் மற்றும் விளம்பரங்களை வழங்குவதற்காக

நிகழ்ச்சி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2012 இல் ஆறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ரூபவாஹினியின் மூலம் ஒளிபரப்பப்பட்டுள்ளன.

## பாடசாலை/ திறந்த போட்டி

**தொழில்முயற்சி பாரம்பரியத்தை இலங்கைச் சமூகத்தின் உள்ளங்களில் படியவைத்தல்**

மேற்குறித்த கருப்பொருளைத் தெளிவூட்டுவதற்காக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பாடசாலை/ திறந்த போட்டியை நடாத்தியுள்ளது. கல்வி அமைச்சு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுடன் பாடசாலைகள் போட்டிகளில் பங்கேற்றிருந்தன. இலங்கையில் சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் பின்வரும் போட்டிகள் நடாத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டன. போட்டிக்கான மொழிகளாக சிங்கள மொழியும் தமிழ் மொழியும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

1. புதிய வியாபாரங்களுக்கான தொழில்முயற்சியாளர்களின் எண்ணங்களுக்கான பரிந்துரைகளின் போட்டி – பாடசாலை மட்டம்

2. புதிய வியாபாரங்களுக்கான தொழில்முயற்சியாளர்களின் எண்ணங்களுக்கான பரிந்துரைகளின் போட்டி – பொது மக்களுக்கானது

நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு 2012 இன் இறுதியில் திறந்த போட்டியாளர்களிடமிருந்தும் பாடசாலைகளிலிருந்தும் பரிந்துரைகள் கோரப்பட்டிருந்தன. வலய மட்டத்தில் அதிபர்களுக்கு செய்தியை வழங்குவதற்காக பணிப்பாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக மஹரகம, தேசியக் கல்வி நிறுவகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையால் இரு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

# 3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

## 3.1 தயாரிப்பு அடிப்படை

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் (அதிகாரசபை) நிதிக்கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் அவற்றின் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. சில சிக்கலான கணக்கீட்டு மதிப்பீடுகள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களில் விபரிக்கப்பட்ட

விடயங்களுக்கு ஏற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோக நடைமுறையில் அதன் நடுநிலைத் தன்மையை முகாமைத்துவம் பிரயோகிப்பதற்கு அது வேண்டப்படுகின்றது. உயர் மட்ட நடுநிலைத் தன்மைகள் அல்லது சிக்கல்கள் அடங்கிய பகுதிகள் அல்லது நிதிக்கூற்றுக்களில் மதிப்பீடுகள் முக்கியத்துவம் பெறுகையில் அவை 2.15 குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2011 திசெம்பர் 31 வரை அமுலாகும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அறிக்கைக் காலப்பகுதி உள்ளடங்கும் வகையில் கடந்த காலப்பகுதிக்கான அதன் நிதிக்கூற்றுக்களை அதிகாரசபை தயாரித்துள்ளது. நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபையின் முதலாவது இலங்கை கணக்கீட்டு நியம SLFRS நிதிக்கூற்றுக்களாவதுடன் இவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ற வகையில் முதற் தடவை SLFRS இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலப்பகுதிகளில் குறிப்பிடப்பட்ட அதிகாரசபையின் நிதி நிலைமைகள் மற்றும் நிதிச்செயலாற்றல்கள் மீதான கொடுக்கல் வாங்கல்களுக்கு இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தாக்கங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 15 இல் தரப்பட்டுள்ளது.

## 3.2 கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள் குறிப்பிடப்பட்டாலன்றி, சுருக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டது முதல் SLFRSs மாற்றப்பட்ட திகதியின் ஆரம்ப நிதி நிலைமைக் கூற்று வரையான காலப்பகுதியின் போது தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டிருந்தன.

முன்னைய ஆண்டின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றின் வெளிப்படுத்தலும் வகைப்படுத்தலும் உரிய வகையில் சிறந்த வெளிப்படுத்தலுக்காகவும் நடப்பாண்டினதுடன் ஒப்பிடுவதற்கு ஏதுவான வகையிலும் திருத்தப்பட்டுள்ளது.

## 3.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆரம்பத்தில் அவற்றின் கிரயத்தில் அங்கீகரிக்கப்பட்டு முகாமைத்துவத்தால் வேண்டப்பட்டவாறு இயங்கும் நிலைக்கும் தற்போதைய இடத்திற்கு கொண்டுவரப்படுவதற்காக நேரடியாக ஏற்கப்படும் எந்தக் கிரயத்தையும் உள்ளடக்கியுள்ளன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொடர் கிரயங்கள் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் உள்ளடக்கப்படுகின்றன. அவ்வாறில்லாத விடத்து அதிகாரசபைக்கு விடயத்துடன்

தொடர்புபட்ட எதிர்கால பொருளாதார நலன் பாய்ச்சப்பட்டு விடயத்தின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்படுகையில் மாத்திரமே ஓர் சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது. சகல ஏனைய திருத்தங்களும் பராமரிப்பும், அவை உறப்பட்ட நிதிக் காலப்பகுதிக்கான விபரமான வருமானக் கூற்றில் சாட்டப்பட்டுள்ளன.

பெறுமானத்தேய்வு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலப்பகுதியில் அவற்றின் கிரயம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்தினை ஒதுக்கும் வகையில் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திக் கணிப்பிடப்படுகின்றது.

| சொத்துக்களின் வகை | | வீதம் |
|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 8 வருடங்கள் | 12.5% |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 வருடங்கள் | 10 % |
| மோட்டார் வாகனங்கள் | 5 வருடங்கள் | 20 % |
| கணனிகளும் உதிரிப்பாகங்களும் | 4 வருடங்கள் | 25 % |
| நூலகப் புத்தகங்கள் | 10 வருடங்கள் | 10 % |

சொத்தொன்றின் தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையைப் பார்க்கிலும் உயர்வானதெனில் அதன் அறவிடப்பட வேண்டிய தொகையிலிருந்து சொத்தொன்றின் தொகை உடனடியாக பதிவழிக்கப்பட வேண்டும்.

### 3.3.1 நிதியல்லாச் சொத்துக்களின் சேதம்

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் அதிகாரசபை அதன் ஆதன பொறி மற்றும் உபகரணங்களினதும் ஆதன முதலீடுகளினதும் அருவகச் சொத்துக்களினதும் தொகைகளை அச் சொத்துக்கள் சேதமடைந்துள்ளமைக்காக ஏதேனும் அறிகுறிகள் உள்ளனவா என்பதை நிர்ணயிப்பதற்காக மீளாய்வுசெய்கின்றது. அத்தகைய ஏதேனும் அறிகுறிகள் இருப்பின் சேத இழப்பின் அளவை நிர்ணயிப்பதற்கு சொத்துக்களின் திரும்பப் பெறத்தக்க தொகை மதிப்பிடப்படுகின்றது.

நியாயக் கிரயங்களிலிருந்து விற்பனைக்கான கிரயங்களைக் கழித்து வரும் பெறுமதியையும் பயன்பாட்டுப் பெறுமதியையும் ஒப்பிடுகையிலான கூடிய பெறுமதியே திரும்பப் பெறத்தக்க தொகையாகும். பயன்பாட்டுப் பெறுமதியை மதிப்பிடுகையில் பணப் பெறுமதியீட்டுக் காலத்தின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளையும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மதிப்பீடுகள் சீராக்கப்படாத குறித்த சொத்துக்களின் இடர்களையும் பிரதிபலிக்கும் முன் வரிக் கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதியில் மதிப்படப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கழிவிடப்படுகின்றன.

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் தொகையைப் பார்க்கிலும் மதிப்பிடப்பட்ட திரும்பப் பெறத்தக்க தொகை குறைவாக இருப்பின் சொத்தின் கொண்டுள்ள பெறுமதி அதன் திரும்பப் பெறத்தக்க தொகைக்குக் குறைக்கப்பட்டுள்ளது. விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக சேத இழப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 3.4 நிதிச் சொத்துக்கள்

### 3.4.1 வகைப்படுத்தல்

### (அ) வகைப்படுத்தல்

அதிகாரசபை ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களை அவற்றின் வகைப்படுத்தலில் நிர்ணயிப்பதுடன் பின்வருமாறு அதன் நிதிச்சொத்துக்களை வகைப்படுத்துகின்றது.

**கடன்களும் பெறவேண்டியவைகளும்**

ஓர் தொழிற்படு சந்தையில் கோரப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்படாத கொடுப்பனவுகளுடனான வழிவரா நிதிச் சொத்துக்களே கடன்களும் பெறவேண்டியவையுமாகும். இறுதி அறிக்கைக் காலத்தை அடுத்து 12 மாதங்களுக்கு மேலான முதிர்வுக்காலத்தைக் கொண்ட நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுபவை தவிர்ந்த கடன்களும் பெறவேண்டியவையும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படுகின்றன. அதிகாரசபையின் கடன்களும் பெறவேண்டியவையும் அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை, அரசாங்க பிணைகளின் மீள்கொள்வனவு, முற்பணங்கள், வைப்புகள், ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்குகின்றன.

.

### 3.4.2 ஏற்பிசைவும் ஆரம்ப அளவீடும்

கடன்கள் மற்றும் பெறவேண்டியவையாக வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்துக்கள் அதிகாரசபை கொடுக்கல் வாங்கலை ஆரம்பிக்கும் திகதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓர் நிதிச்சொத்து அதன் நியாயப் பெறுமதி கூட்டப்பட்டு ஆரம்பத்தில் அளவிடப்படுவதுடன் நியாயப்பெறுமதியில் அல்லாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தில் நேரடியாகப் பெறப்படும் கொடுக்கல் வாங்கல் கிரயங்களில் அளவிடப்படுகின்றன.

நிதிச்சொத்துக்களிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் பெறுவனவு உரிமைகள் முடிவடைகையில் அல்லது மாற்றப்படுகையிலும் அதிகாரசபை பாரியளவில் சகல

இடர்களையும் நிதிச்சொத்துக்களின் உரிமையின் அன்பளிப்பையும் மாற்றியிருப்பின் நிதிச்சொத்துக்கள் அடையாளமிடப்படாது விடப்படுகின்றன.

### 3.4.3 அடுத்து மேற்கொள்ளப்பட்ட அளவீடுகள்

#### I. கடன்களும் பெறவேண்டியவைகளும்

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, கடன்களும் பெறவேண்டியவைகளும் ஆக்கபூர்வமான வட்டி முறையில் சேதத்திற்கான ஏற்பாடு கழிக்கப்பட்டு அடிப்படைக் கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் பின்னர் மதிப்பிடப்பட்டு (மாற்ற விலை) நியாயப்பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டு பெறவேண்டியவைகள், முற்பணங்கள் மற்றும் வைப்புகள் கழிக்கப்பட்டு காலக்கழிவு கிரய முறையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

### 3.4.4 நிதிச் சொத்துக்களின் சேதம்

**காலக்கழிவுக் கிரயத்தில் பேணப்படும் சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் முடிவிலும் நிதிச் சொத்துக்கள் சேதமுற்றுள்ளதற்கான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சான்றுகள் இருப்பின் அதிகாரசபையால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஓர் நிதிச்சொத்து நம்பத்தகுந்த முறையில் மதிப்பிடப்பட முடியுமாயின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீது தாக்கம் இருக்குமாயின் அல்லது சம்பவங்கள் அவ் இழப்பு சம்பவம் (ஓர் இழப்பு சம்பவம்) சொத்தில் ஆரம்ப அடையாளம் காணலை அடுத்து நிகழும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக சேதத்தின் நடுநிலைச் சான்று இருந்தால் மாத்திரமே ஓர் நிதிச்சொத்து சேதமடைவதுடன் சேத இழப்புகளும் ஏற்படுகின்றன.

காலக்கழிவு கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளுக்காக சொத்துக் கொண்டுசெல்லல் தொகைக்கும் எதிர்கால காசுப்பாய்ச்சல் மதிப்பீட்டு நடைமுறைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு (செலவிடப்படாத எதிர்கால கடன் இழப்புகள் தவிர) நிதிச் சொத்துக்களின் மூல தாக்கல் வட்டி விகிதத்தில் கழிக்கப்பட்டு இழப்புத் தொகை அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை குறைக்கப்பட்டு இழப்புத் தொகை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

தொடர்ந்துவரும் காலப்பகுதியின் போது சேத இழப்புகளின் தொகை குறைந்து அக்குறைவு சேதம் ஏற்பிசைவு செய்யப்பட்டதை அடுத்து ஓர் நிகழ்விற்கு பாரியளவில்

தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பின் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பின் மீட்பு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

## 3.5 காசும் காசிற்குச் சமமானவைகளும்

காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசிற்குச் சமமானவைகளில் கையிலுள்ள காசை உள்ளடக்கும்.

## 3.6 நிதிப் பொறுப்புகள்

அதிகாரசபை நிதிப் பொறுப்புகளை ஏனைய நிதிப் பொறுப்புகளாக வகைப்படுத்துகின்றது. ஆதிகாரசபையின் ஏனைய நிதிப் பொறுப்புகள் செலுத்த வேண்டியவைகளைா உள்ளடக்கும். ஏனைய நிதிப் பொறுப்புகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியுடன் ஏனைய நேரடி ஏற்கத்தகு கொடுக்கல்வாங்கல் கிரயங்களைச் சேர்த்து ஏற்கப்படுகின்றது. ஆரம்ப ஏற்பைத் தொடர்ந்து ஏனைய நேரடி ஏற்கத்தகு கொடுக்கல்வாங்கல் கிரயங்களைச் சேர்த்து ஏற்கப்படுகின்றது. ஆரம்ப ஏற்பைத் தொடர்ந்து நிலுவைகள் குறுகிய காலப்பகுதியில் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் இந்நிதிப் பொறுப்புகள் நடைமுறை வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவில் அளவிடப்படுகின்றன.

அதிகாரசபை நிதிப் பொறுப்பை அதன் ஒப்பந்தமயக் கடப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டதும், இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது முடிவுற்றதும் ஏற்பிசைவு செய்வதில்லை.

## 3.7 அரசாங்க மானியங்கள்

அதிகாரசபையால் மானியம் பெறப்பட்டு சகல இணைக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கும் வகையில் செயற்படும் எனும் உறுதிப்பாட்டுடனும் அரசாங்கத்திலிருந்தான மானியங்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றன.

ஆதன, இயந்திரம் மற்றும் உபகரணங்களுடன் தொடர்புபட்ட அரசாங்க மானியம் பிற்போடப்பட்ட அரசாங்க மானியமாக நடைமுறையல்லாப் பொறுப்புகளில் உள்ளடக்கப்பட்டு தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட வாழ்க்கைக் காலத்திற்கு நேர் கோட்டு அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

## 3.8 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையால் விதிக்கப்படும் வரிகள், இறைகள், தீர்வைக் கொடுப்பனவிற்காக அக் காலப்பகுதியில்

அமுலில் உள்ள ஏதேனும் ஏனைய எழுத்து மூலச் சட்டங்களின் பிரகாரம் அல்லது 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட அளவிலான இலாபம் அல்லது வருமானத்தின் மீதான சகல வரிகள், இறைகள், தீர்வைக் கொடுப்பனவிலிருந்தும் அதிகாரசபை விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

## 3.9 ஊழியர் நலன்கள்

அதிகாரசபை தெளிவூட்டப்பட்ட பங்களிப்புத் திட்டங்களையும் தெளிவூட்டப்பட்ட நலன் திட்டங்கள் ஆகிய இரண்டையும் கொண்டுள்ளது.

### (அ) தெளிவூட்டப்பட்ட பங்களிப்புத் திட்டம்

பின்னைய தொழில் நலனுக்காக அதிகாரசபையால் வேறு ஓர் நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஓர் நிலையான பங்களிப்புகளைச் செலுத்துவதே தெளிவாக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். அதிகாரசபை எதிர்காலப் பங்களிப்புகளைச் செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது தொடர் கடப்பாடுகளைக் கொண்டதல்ல. பங்களிப்புகள் அவை செலுத்தப்பட வேண்டிய நிலைக்குட்படுகையிலேயே ஊழியர் நலன் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

அதிகாரசபை ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 12% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 3% இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

### (ஆ) தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம்

தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம் தொடர்பாக அதிகாரசபையின் கடப்பாடுகள் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் உள்ளவாறான தெளிவூட்டப்பட்ட நலன் திட்டத்தின் தற்போதைய பெறுமதிக்கே உள்ளன. பணிக்கொடைச் சூத்திரத்தைப் பிரயோகித்து திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி வருடாந்தம் தெளிவூட்டப்பட்ட நலன் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன. தற்போதைய மற்றும் முன்னைய காலப்பகுதியில் ஊழியர்களின் சேவைகளுக்காக அவர்களது உழைப்பின் மதிப்பிடத்தக்க எதிர்கால நலனைக் கழிப்பதன் மூலம் தெளிவூட்டப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது.

எடுகோள்கள், நடைமுறைச் சேவைக் கிரயம் மற்றும் வட்டியிலான மாற்றங்களிலிருந்து உருவாகும் இலாபங்களும் நட்டங்களும் விபரமான

வருமானக் கூற்றில் அவை உருவாகும் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் வெளிவாரியாக நிதியீட்டப்பட்டவை அல்ல.

**(இ) குறுங்கால ஊழியர் நலன்கள்**

குறுங்கால ஊழியர் நலன் கடப்பாடுகள் ஊழியர்களால் வழங்கப்பட்ட தொடர்புபட்ட சேவைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய ஓர் கழிவிடப்படாத தொகையில் மதிப்பிடப்பட்டு அளவிடப்படுகின்றது.

## 3.10 ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புகளும்

ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புகளும் கடந்த சம்பவமொன்றின் விளைவாக அதிகாரசபை தற்போதைய சட்ட ரீதியான அல்லது தொடர்கடப்பாடுகளை கொண்டிருக்குமாயின் பொருளாதார மூலவளத்தின் வெளிப்பாய்ச்சல் பெரும்பாலும் அதிகாரசபையிலிருந்து தேவைப்படுமாயின் தொகைகளும் நம்பகரமான முறையில் மதிப்பிடப்படக் கூடியதாக உள்ள போது ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

தற்போதைய கடப்பாடுகளைத் தீர்க்கக்கூடியதற்கு தேவையான மதிப்பீட்டு செலவினத்தில் ஏற்பாடுகள் தற்போதைய கடப்பாடுகளுடன் தொடர்புபட்ட உறுதியற்ற தன்மை மற்றும் இடர்கள் உள்ளடங்கலாக, அறிக்கைத் திகதியில் நிலவும் கூடியளவில் கிடைக்கப்பெறும் நம்பத்தகுந்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றன.

சகல நிகழத்தகு பொறுப்புகளும் மூலவளங்களின் ஓர் வெளிப்பாய்ச்சலுக்கான வாய்ப்பு இருந்தாலன்றி நிதிக்கூற்றுக்களில் ஓர் குறிப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன.

## 3.11 மானியங்களினதும் வருமானங்களினதும் ஏற்பிசைவு

அதிகாரசபை அதன் மானியங்கள் மற்றும் வருமானங்களுக்கு பின்வரும் ஏற்பிசைவு வகைப்படுத்தலைப் பிரயோகிக்கின்றது.

**(அ) ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஆ) நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மானியம்**

மூலதன மானியமானது தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வருடாந்த ஒதுக்கீடாகும். திறைசேரியிலிருந்து மானியம் பெறப்படும் எனும்

நியாயமான உறுதிப்பாடிருக்கையில் மாத்திரமே மானியம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(இ) மீண்டெழும் மானியம்**

பெறப்பட்ட மீண்டெழும் மானியம் திறைசேரியிலிருந்து நிதி கிடைக்கப்பெற்றதும் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

## 3.12 செலவினங்கள்

**(அ) நிகழ்ச்சித்திட்டச் செலவினம்**

நிகழ்ச்சித்திட்டச் செலவினங்கள் காசு அடிப்படையில் விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஆ) ஏனையவைகள்**

அறிக்கைக் காலப்பகுதிக்கான இலாபத்தை ஈட்டுவதற்கான வருமானமாக தொழிற்பாட்டில் ஏற்கப்படும் சகல ஏனைய செலவினங்களுமாகும்.

## 3.13 அறிக்கைக் காலப்பகுதியை அடுத்துள்ள சம்பவங்கள்

அறிக்கைக் காலப்பகுதியின் பின்னரான சகல பொருண்மையான சம்பவங்களும் கருத்திற்கொள்ளப்பட்டு உரியவாறு சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களின் குறித்த குறிப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3.14 கடப்பாடுகள்

அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் சகல பொருண்மையான கடப்பாடுகளும் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளால் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

## 3.15 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்வுகளும்

சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவீடுகள் மற்றும் ஏற்பிசைவு பற்றிய சில நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில், முகாமைத்துவ தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்கின்றது.

3.15.1 சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவீடு மற்றும் செலவின அளவீடு மற்றும் ஏற்பிசைவு மீதான பாரிய தாக்கத்துடனான மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பற்றிய தகவல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

**(அ) பெறுமானத்தேய்விடத்தக்க சொத்துக்களின் பயன்தரு வாழ்க்கைக் காலம்**

ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்விடத்தக்க சொத்துக்களின் பயன்தரு வாழ்க்கைக் காலத்தில் அதன் மதிப்பீட்டை முகாமைத்துவம் மீளாய்வு செய்கின்றது. தகவல் தொழிநுட்ப உபகரணம் மற்றும் சில மென்பொருளின் பயன்பாட்டை மாற்றத்தக்க தொழிநுட்ப வழக்கிழப்புடன் இம் மீதிகளின் நிலையில்லா தன்மைகள் தொடர்புபட்டன.

**(ஆ) தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம்**

சில எடுகோள்களைப் பயன்படுத்தி கடன் அடிப்படைச் செயற்திட்ட அலகு மீது நிர்ணயிக்கப்பட்ட சில காரணிகளை தெளிவூட்டப்பட்ட நலன் திட்டத்தின் நடைமுறைப் பெறுமதி சார்ந்துள்ளது. கழிவு விகிதம் உள்ளடங்கலாக வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்திற்கான கடப்பாடுகள் மற்றும் தேறிய கிரயத்தை நிர்ணயிக்கையில் எடுகோள்கள் குறிப்பு 19 இவ் வெளியிடப்பட்டுள்ளது.

## 3.16 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRSs)/ LKAS முதல் தடவையாகப் பின்பற்றல்

2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRSs) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுக்களாகும். 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அறிக்கை காலப்பகுதி வரை அடங்கலான முன்னைய அறிக்கைகாலப்பகுதிகளில் அதிகாரசபை 2011 திசெம்பர் 31 வரை அமுலாக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLAS) பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தது.

இந் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் ஆரம்ப நிதிநிலைமைக் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRSs) ஆரம்பத் திகதியான 2011 சனவரி 1 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டது. 2011 சனவரி 1, 2011 திசெம்பர் 31 இன் அறிக்கைக் காலப்பகுதிக்கான SLAS நிதிக்கூற்றுக்களை SLFRSs நிதிக்கூற்றுக்களுக்கு மாற்றியமைப்பதற்கு இக்குறிப்பு மூலச் சீராக்கங்களை விளக்குகின்றது.

### 3.16.1 பின்வரும் மாற்று விலக்களிப்புகள் அதிகாரசபைக்கு உரித்தானவை அல்ல.

(அ) பிடித்து வைத்தல் கிரயமாக நியாயப் பெறுமதி அல்லது மீள்மதிப்பீடு அதிகாரசபைக்கு உரித்தற்ற பிரயோகமாகையால்

(ஆ) முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிக்கருவிகளின் ஏற்பு

(இ) SLFRS 4 – காப்புறுதி ஒப்பந்தங்கள், இப் பிரயோகம் அதிகாரசபைக்கு உரித்தானதல்ல.

(ஈ) IFRIC 4 – அதிகாரசபை அத்தகைய ஒழுங்குகளை கொண்டிராமையால் ஒழுங்கில் ஓர் குத்தகை உள்ளதா என்பதை நிர்ணயித்தல்.

(உ) LKAS 19 – ஊழியர் நலன்கள், விபரமான வருமானக் கூற்றில் உள்ளபடியான இலாப நட்டங்களை அதிகாரசபை ஏற்பிசைவு செய்துள்ளமை.

(ஊ) LKAS 21 – மாற்றலின் போது ஏற்படும் திரண்ட வேறுபாடுகள் இதுவரையில் அதிகாரசபை வெளிநாட்டுத் தொழிற்பாட்டைக் கொண்டிராமை.

(எ) LKAS 27 - துணைக் கம்பனி, கூட்டாக நிர்வகிக்கப்படும் அமைப்புகளிலும் ஒன்றித்த அமைப்புகளிலுமான முதலீடுகள், அதிகாரசபைக் கூட்டமைப்புகளைக் கொண்டிராமை.

(ஏ) துணைக் கம்பனிகளும் ஒன்றித்த அமைப்புகளும் SLASs இலிருந்து SLFRSs இற்கு மாற்றமானமையால் துணைக் கம்பனிகளினதும் ஒன்றித்த அமைப்புகளினதும் கூட்டு முயற்சிகளினதும் சொத்துக்களும் பொறுப்புகளும்.

(ஐ) LKAS 32 - கூட்டு நிதிப் பொறிகள், அதிகாரசபை கூட்டு நிதிப் பொறிகளைக் கொண்டிராமை.

(ஒ) ஆதன, பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்ட அதிகாரபூர்வமற்ற பொறுப்புகளை அகற்றல், அதிகாரசபை அதிகாரபூர்வமற்ற பொறுப்புகளை அகற்றுவதற்கும், மீளமர்வுக் கிரயங்கள் மற்றும் தொடர்புபட்ட பொறுப்புகளையும் இனங்கண்டு உள்ளடக்குவதற்கும் அதிகாரசபை முறையான நடைமுறையைக் கொண்டிருக்கவில்லை.

(ஓ) IFRIC 12 – சேவைச் சலுகை ஒழுங்குகள், அதிகாரசபை அத்தகைய ஒழுங்கைக் கொண்டிராமை.

**ஏனைய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைப் (SLFRSs) பயன்படுத்துகையில் சட்டரீதியான விதிவிலக்குகள்**

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) இணங்க முதற்தடவையாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் ஏனைய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) பின்னோக்கிய பிரயோகத்திலிருந்து பின்வரும் சட்டரீதியான விதிவிலக்குகளை பிரயோகிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**(அ) கணக்கீட்டு மதிப்பீடுகள்**

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) இற்கு மாற்றப்பட்ட தினத்திலும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் உள்ள சகல கணக்கீட்டு மதிப்பீடுகளும் 2011 திசெம்பர் 31 வரை அமுலான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLAS) பிரகாரம் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளும் இணங்கும் வகையில் காணப்பட்டன.

**(ஆ) அதிகாரசபைக்கு பின்வரும் சட்டரீதியான விதிவிலக்குகள் ஏற்புடையவை அல்ல.**

(அ) நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளை மீள ஏற்பிசைவு செய்தல்.

(ஆ) இழப்பீட்டுக் கைகாப்புக் கணக்கீடு (Hedge Accounting)

(இ) கட்டுப்படுத்தப்பட முடியாத வட்டி

## 3.17 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) மாற்றப்படுவதை தெளிவூட்டல்

அதிகாரசபை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு மாற்றலான 2011 சனவரி 01 இல் உள்ளவாறான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) ஆரம்பக் கூற்றும் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அறிக்கைக் காலப்பகுதிக்கான ஒப்பீட்டுத் தகவலுடன் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அறிக்கைக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் குறிப்பு 2 இல் விதந்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) அடிப்படையில் கடந்த அறிக்கைக் காலப்பகுதிகளின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் தேவையான சீராக்கங்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் (SLASs) இலிருந்து (SLFRSs) களுக்கான மாற்றங்களின்

தாக்கம் இணக்கங்களின் குறிப்புகள் மற்றும் விபரமான வருமானக் கூற்று, மூலதன இணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

| | | 2012 | 2011 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **7** | **ஏனைய வருமானம்** | | |
| | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர் வழிகாட்டி நூல் | 50,000 | 100,000 |
| | அலுவலக வாகன வசதிகள் மீதி வழங்கப்படும் கழிவு | 3,283 | 6,000 |
| | கேள்விக் கட்டணங்கள் | 2,000 | 20,526 |
| | பழைய பத்திரிகைகளின் விற்பனை | 2,076 | - |
| | | **57,359** | **126,526** |
| **8** | **நிர்வாகச் செலவினங்களை** | | |
| | சம்பளங்களும் ஊதியங்களும் | 5,771,150 | 5,594,087 |
| | மேலதிக நேரம் | 343,676 | 339,260 |
| | வாழ்க்கைக் கிரயம் | 1,506,570 | 1,131,713 |
| | ஊழியர் சேமலாப நிதியம் 12% | 852,153 | 523,679 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் 3% | 213,038 | 131,176 |
| | 5% விசேட படிப்பணம் | 84 | 211,102 |
| | 10% விசேட படிப்பணம் | 112,167 | - |
| | 15% விசேட படிப்பணம் | 607,421 | - |
| | மொழிப் படிப்பணம் | 2,880 | - |
| | சபை அங்கத்தவர்களுக்கான படிப்பணம் | 128,000 | 130,350 |
| | வாகனப் படிப்பணம் | 360,000 | 360,000 |
| | கணக்காய்வு அங்கத்தவர்களுக்கான படிப்பணம் | 65,640 | - |
| | போக்குவரத்துப் படிப்பணம் | 22,000 | - |
| | வாடகைச் செலவினங்கள் | 4,934,996 | 4,382,072 |
| | விளம்பரம் | 448,078 | 214,872 |

| | | |
|---|---|---|
| தபால் | 49,477 | 50,174 |
| தொலைபேசி | 512,612 | 570,412 |
| இணையதளக் கட்டணங்கள் | 59,821 | - |
| ஏனைய செலவினங்கள் | 413,130 | 220,002 |
| அச்சீட்டுக் கட்டணங்கள் | 93,700 | 177,313 |
| சுத்திகரிப்புக் கட்டணங்கள் | 278,208 | 262,901 |
| கண்காட்சி/ஊக்குவிப்புச் செலவினங்கள் | - | 785,777 |
| வாகன வாடகைக் கட்டணங்கள் | 450,531 | 654,015 |
| மின்சாரம் மற்றும் நீர் | 1,328,740 | 714,612 |
| காப்புறுதிக் கட்டணங்கள் | 270,414 | - |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 70,000 | 225,509 |
| ஏனைய சேவைகள் | 240,117 | 75,000 |
| உள்நாட்டுப் போக்குவரத்து | 130,037 | 377,061 |
| வெளிநாட்டுப் போக்குவரத்து | 258,411 | - |
| வாகனப் பராமரிப்பு | 538,329 | 517,182 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | 70,331 | 65,772 |
| சிற்றுண்டி | 146,329 | 121,631 |
| காகிதாதிகளும் அலுவலகத் தேவைப்பாடுகளும் | 374,446 | 336,835 |
| பத்திரிகைக் கட்டணங்கள் | 101,091 | 63,695 |
| எரிபொருள் | 996,332 | 885,270 |
| மேலதிக எரிபொருள் | 32,343 | 13,615 |
| மோட்டார் வாகனப் பெறுமானத்தேய்வு | 3,296,862 | 770,000 |
| அலுவலக உபகரணப் பெறுமானத்தேய்வு | 127,845 | 104,851 |
| தளபாடப் பெறுமானத்தேய்வு | 513,119 | 312,891 |
| நூலகப் புத்தகப் பெறுமானத்தேய்வு | 2,451 | 2,451 |
| ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடு | 50,341 | 46,389 |
| திருத்தக் கட்டணங்கள் | - | 163,450 |
| கணனி மற்றும் உதிரிப்பாகப் பெறுமானத்தேய்வு | 486,770 | 326,839 |
| வங்கிக் கட்டணங்கள் | 15,800 | 22,730 |
| | **26,275,440** | **20,884,686** |

2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

## 10 ஆதன, பொறி, உபகரணங்கள்

| இறையிலாதனக் கிரயம் | மோட்டார் வாகனங்கள் | அலுவலக உபகரணம் | அலுவலக தளபாடம் | கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் | நூலகப் புத்தகங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **3,850,000** | **922,000** | **497,022** | **1,802,159** | **24,505** | **7,095,686** |
| சேர்ப்பனவுகள் | - | 251,050 | 4,774,563 | 254,750 | - | 5,280,363 |
| அகற்றல்கள் | - | - | - | - | - | - |
| **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **3,850,000** | **1,173,050** | **5,271,585** | **2,056,909** | **24,505** | **12,376,049** |
| சேர்ப்பனவுகள் | 16,645,500 | 15,795 | - | 1,386,000 | - | 18,047,295 |
| அகற்றல்கள் | - | - | - | - | - | - |
| **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **20,495,500** | **1,188,845** | **5,271,585** | **3,442,909** | **24,505** | **30,423,344** |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| **2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **2,346,360** | **244,567** | **70,032** | **1,149,518** | **5,893** | **3,816,370** |
| ஆண்டிற்கான அறவீடுகள் | 770,000 | 104,851 | 312,891 | 326,839 | 2,451 | 1,517,032 |
| கைதவிர்ப்புகள் / சீராக்கம் | - | - | - | - | - | - |
| **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **3,116,360** | **349,418** | **382,923** | **1,476,358** | **8,343** | **5,333,402** |
| ஆண்டிற்கான அறவீடுகள் | 3,296,862 | 127,845 | 513,119 | 486,770 | 2,451 | 4,427,047 |
| **அகற்றல்கள்** | - | - | - | - | - | - |
| **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **6,413,222** | **477,263** | **896,042** | **1,963,127** | **10,794** | **9,760,448** |

| **தேறிய கொண்டுசெல்லல் பெறுமதி** | **2012** | **2011** | **2011 சனவரி 01** |
|---|---|---|---|

| | | | இல் உள்ளவாறானது |
|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 14,082,277 | 733,640 | 1,503,640 |
| அலுவலக உபகரணம் | 711,582 | 823,632 | 677,433 |
| தளபாடமும் பொருத்திகளும் | 4,375,543 | 4,888,662 | 426,990 |
| கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் | 1,479,782 | 580,551 | 652,641 |
| நூலகப் புத்தகங்கள் | 13,711 | 16,162 | 18,612 |
| | **20,662,895** | **7,042,647** | **3,279,316** |

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

**நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள்ளின் வகைப்படுத்தல்கள்**

நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் தொகை பின்வருமாறாகும்.

**நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டு செல்லல் பெறுமதிகள்**

| | | 2012 | 2011 | 2011 சனவரி 01 இல் உள்ளவாறானவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| **கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்** | | | | |
| **பெறவேண்டியவைகள்** | குறிப்பு 11 | 228,653 | - | - |
| வைப்புகளும் முற்பணங்களும் | குறிப்பு 12 | 857,380 | 1,043,180 | 85,000 |
| விழா முற்பணம் | | 23,500 | 12,000 | 11,000 |
| **காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளும்** | | 81,509 | 1,998,625 | 1,937,087 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | | **1,191,042** | **3,053,805** | **2,033,087** |

கடன்களும் பெறவேண்டியவைகளும் கொண்டு செல்லல் பெறுமதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றின் நியாயப்பெறுமதியிலும் கொண்டு செல்லல் பெறுமதிகள் துல்லியமானவையாகும்.

| 11. பெறவேண்டியவைகள் | 2012 | 2011 | 2011 சனவரி 01 இல் உள்ளவாறானவை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கைத்தொழில் அமைச்சு – கைத்தறி நிகழ்ச்சித்திட்டம் | **228,653** | **-** | **-** |

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

| | | 2012 | 2011 | 2011 சனவரி 01 இல் உள்ளவாறான வை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| **12.** | **வைப்புகளும் முற்பணங்களும்** | | | |
| | வாடகை வைப்பு | 799,380 | 799,380 | - |
| | முற்பணங்கள் | 58,000 | 228,800 | 70,000 |
| | ஏனையவை | - | 15,000 | 15,000 |
| | | **857,380** | **1,043,10** | **85,000** |

| | | | | |
|---|---|---|---|---|
| **13.** | **முற்கொடுப்பனவுச் செலவினங்கள்** | | | |
| | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - வாகன இல. WPKF -5936 இன் காப்புறுதி | | 84,165 | |
| | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - வாகன இல. WPPD – 6379 இன் காப்புறுதி | 26,227 | | |
| | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - வாகன இல. WPNB -3108 இன் காப்புறுதி | 52,334 | | |
| | | **78,561** | **84,165** | **-** |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | **அரசாங்க மானியம்** | | | |
| | **சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **5,644,967** | **2,147,664** | **9,310,431** |
| | ஆண்டின் போது பெறப்பட்டவை | 17,400,000 | 5,500,000 | 200,000 |
| | ஒன்றுதிரண்ட வருமானத்தில் இனங்காணப்பட்டவை | (4,093,002) | (2,002,697) | - |
| | எஸ்எல்எப்ஆர்எஸ் களிற்கு மாற்றப்பட்ட திகதியில் ஈட்டப்பட்ட பிடித்து வைக்கப்பட்ட உழைப்பின் சீராக்கம் | - | - | (7,362,767) |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **18,951,965** | **5,644,967** | **2,147,664** |

| | | | | |
|---|---|---|---|---|
| **15.** | **இளைப்பாற்று நலன் கடப்பாடு** | | | |
| | **சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **149,027** | **102,638** | **-** |
| | ஒன்றித்த வருமான இனங்காணலின் (குறிப்பு 9.1) செலவினங்கள் | 50,341 | 46,389 | - |
| | ஆண்டின் போதான கொடுப்பனவு | - | - | - |
| | ஏஸ்எல்எப்ஆர்எஸ் களுக்கு மாற்றப்பட்ட திகதியில் இறுக்கப்பட்ட உழைப்பின் சீராக்கங்கள் | - | - | 102,638 |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **199,368** | **149,027** | **102,638** |

| | | | |
|---|---|---|---|
| **9.1 ஒன்றித்த வருமான இனங்காணலின் செலவினங்கள்** | | | |
| நடைமுறை சேவைக் கிரயம் | 64,132 | 47,408 | 46,491 |
| ஆண்டிற்காக விதிக்கப்பட்ட வட்டி | 17,883 | 9,751 | - |
| எடுகோளிலான மாற்றங்களிலிருந்தான (இலாபம்)/ நட்டம் | (31,674) | (10,769) | 56,147 |
| | **50,341** | **46,389** | **102,638** |

இளைப்பாற்று நலன் கடைப்பாட்டை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மாற்று மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு இவ் எடுகோள்கள் அதிகாரசபையால் விருத்திசெய்யப்பட்டுள்ளன.

பயன்படுத்தப்பட்ட மூல எடுகோள்கள் பின்வருமாறாகும்.

| | | | |
|---|---|---|---|
| கழிவு வீதம் [%] | 12 | 9.5 | 8.5 |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு – சம்பளம் [%] | 2.5 | 2.5 | 2.5 |
| பதவியணி புரள்வு காரணி [%] | 1 | 1 | 1 |
| ஓய்வுபெறும் வயது [ஆண்டுகள்] | 55 | 55 | 55 |

நீண்ட கால அரசாங்க முறிகளின் சராசரி சந்தை வீதத்தின் அடிப்படையில் கழிவு வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | 2012 | 2011 | 2011 சனவரி 01 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 16. | **நிகழ்ச்சித்திட்டத்திற்கான மானியம்** | | | |
| | **சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **788,646** | **592,424** | **-** |
| | ஆண்டின் போது பெறப்பட்ட மானியம் | 14,525,000 | 19,525,000 | - |
| | பயன்படுத்தப்பட்ட நிதியம் | (15,275,239) | (19,328,779) | - |
| | ஏஸ்எல்எப்ஆர்எஸ் களுக்கு மாற்றப்பட்ட திகதியில் இறுக்கப்பட்ட உழைப்பின் சீராக்கங்கள் | - | - | 592,424 |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **38,407** | **788,646** | **592,424** |

நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பின்வரும் அறிக்கைக் காலப்பகுதிகளில் பயன்படுத்தப்பட உள்ள தொகைகளை நிகழ்ச்சித்திட்டத்திற்கான மானியங்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

**17. மூலதனம் மற்றும் ஏனைய கடப்பாடுகள்**

அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் உள்ளவாறு பொருண்மையான மூலதனச் செலவினங்களோ அல்லது ஏனைய நிதிக் கடப்பாடுகளோ பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**18. அறிக்கைக் காலப்பகுதியின் பின்னர் நிகழும் நிகழ்வுகள்**

அறிக்கைத் திகதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் இந் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவையான எவ்வித நிகழ்வுகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

**19. நிகழத்தக்க பொறுப்புகள்**

அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் நிகழத்தக்க பொறுப்புகள் எதுவும் இல்லை.

**20 தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்**

அதிகாரசபையின் தொடர்புபட்ட தரப்பினர்களில் முக்கிய முகாமைத்துவ தரப்பினர், ஏனைய தொடர்புபட்ட நிறுவகங்கள், அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்கள், இலங்கை அரசாங்கம் உள்ளடங்குகின்றனர்.

**முக்கிய முகாமைத்துவ தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் (KMPs)**

இலங்கை கணக்கீட்டு நியமம் எஸ்கேஎஸ் 24 இன் படி "தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" முக்கிய முகாமைத்துவ தரப்பினராக நிறுவகத்தின் நடவடிக்கைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ திட்டமிட்டு, வழிகாட்டி கட்டுப்படுத்துவதற்குப் பொறுப்பானவர்களேயாவர். இதன் படி, முக்கிய முகாமைத்துவ தரப்பினராக பணிப்பாளர் சபை வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**முக்கிய முகாமைத்துவ தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஊதியமும் ஏனைய குறுங்கால ஊழிய நலனும் | 128,000 | 130,350 |

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு**

**தொடர்புபட்ட தரப்பினர்**

அதிகாரசபை மேற்கொள்ளும் முக்கிய தொடர்புபட்ட தரப்பினர்களது கொடுக்கல்வாங்களிது விபரம் பின்வருமாறாகும்.

**இலங்கை அரசாங்கத்துடனும் அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள்**

தொடர்புபட்ட தரப்பினராக (அரசாங்க தொடர்புபட்ட நிறுவனங்கள்) இலங்கை அரசாங்கத்தால் முக்கியமாக கட்டுப்படுத்தப்பட்ட, கூட்டாகக் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தாக்கமளித்த இலங்கை அரசாங்கம் மற்றும் ஏனைய நிறுவனங்களை அதிகாரசபை கருத்திற்கொண்டுள்ளது.

| தொடர்புபட்ட தரப்பினர் | அறிக்கைக் காலப்பகுதியின் போதான கொடுக்கல்வாங்கலின் தன்மை | கொடுக்கல் வாங்கல் பெறுமதி | நிலுவை மீதி பெறுவனவு (கொடுப்பனவு) |
|---|---|---|---|
| **இலங்கை அரசாங்கம்** | ஆண்டின் போது பெறப்படுமத் மானியம் - மூலதனம் | 17,400,000 | (18,951,965) |
| | ஆண்டின் போது பெறப்படுமத் மானியம் - நிகழ்ச்சித்திட்டங்கள் | 14,525,000 | (38,407) |
| | ஆண்டின் போது பெறப்படுமத் மானியம் - மீண்டெழுபவை | 20,075,000 | - |
| **அரசுடமையாக் கப்பட்ட நிறுவனங்கள்** | நடைமுறைக் கணக்குகள் | | 81,509 |

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு**

**எஸ்எல்எப்ஆர்எஸ் களிற்கு மாற்றப்படுகையிலான விளக்கம்**

**2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கூட்டிணைந்த வருமானத்தின் கணக்கிணக்கம்**

| | குறிப்பு | எஸ்எல்ஏஎஸ் இன் கீழ் | எஸ்எல்எப்ஆர் எஸ் களிற்கு மாற்றப்படுகையி லான தாக்கம் | எஸ்எல்எப்ஆர்எ ஸ் களின் கீழ் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| ஆண்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட மானியம் | II | 21,305,591 | (1,976,812) | 19,328,779 |
| நிகழ்ச்சித்திட்ட மானியங்கள் | | (21,305,591) | 1,976,812 | (19,328,779) |
| | | - | - | - |
| பொதுத் திறைசேரியிலிருந்தான மீண்டெழும் மானியங்கள் | | 19,464,000 | - | 19,464,000 |
| அரசாங்க மானியங்களின் காலக்கழிவு | II | - | 2,002,697 | 2,002,697 |
| ஏனைய வருமானம் | | 126,526 | - | 126,526 |
| **மொத்த வருமானம்** | | **19,590,526** | **2,002,697** | **21,593,223** |
| நிர்வாகச் செலவினம் | I / III / IV | 21,059,628 | (174,942) | 20,884,686 |
| மொத்தச் செலவினம் | | **21,059,628** | **(174,942)** | **20,884,686** |
| **ஆண்டிற்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)** | | **(1,469,102)** | **2,177,639** | **708,537** |

## உரிமை மூலதன கணக்கிணக்கம்

| | குறிப்பு | எஸ்எல்ஏஎஸ் இன் கீழ் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | எஸ்எல்எப் ஆர் எஸ் களிற்கு மாற்றப்படுகையிலான தாக்கம் | எஸ்எல் எப் ஆர் எஸ் இன் கீழ் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | எஸ்எல்ஏஎஸ் இன் கீழ் 2011 சனவரி 01 இல் உள்ளவாறு | எஸ்எல்எப் ஆர் எஸ் களிற்கு மாற்றப்படுகையிலான தாக்கம | எஸ்எல்எப் ஆர் எஸ் களின் கீழ் 2011 சனவரி 01 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | | | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | I | 6,600,495 | 442,152 | 7,042,647 | 3,133,495 | 145,821 | 3,279,316 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| வைப்புகளும் முற்பணங்களும் | | 1,043,180 | - | 1,043,180 | 85,000 | - | 85,000 |
| முற்பணச் செலவினங்கள் | | 84,165 | - | 84,165 | - | - | - |
| விழா முற்பணங்கள் | | 12,000 | - | 12,000 | 11,000 | - | 11,000 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | | 1,998,625 | - | 1,998,625 | 1,937,087 | - | 1,937,087 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | **3,137,970** | **-** | **3,137,970** | **2,033,087** | **-** | **2,033,087** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **9,738,465** | **442,152** | **10,180,617** | **5,166,582** | **145,821** | **5,312,403** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | | | | | |
| **உரிமை மூலதனம்** | | | | | | | |
| திரண்ட மிகை / (பற்றாக்குறை) | | (4,440,785) | 7,189,112 | 2,748,327 | (4,948,496) | 6,988,286 | 2,039,791 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **(4,440,785)** | **7,189,112** | **2,748,327** | **(4,948,496)** | **6,988,286** | **2,039,791** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | | | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | | 13,229,838 | - | - | 9,510,430 | - | - |
| அரசாங்க மானியம் | II | - | (7,584,873) | 5,644,967 | - | (7,362,767) | 2,147,664 |
| பாடசாலைப் போட்டிகளுக்காக பெறப்பட்ட பீஓசீ | III | 53,011 | (53,011) | - | 128,011 | (128,011) | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இளைப்பாறல் நலன் கடப்பாடு | IV | - | 149,027 | 149,027 | - | 102,638 | 102,638 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | **13,282,849** | **(7,488,856)** | **5,793,994** | **9,638,440** | **(7,388,139)** | **2,250,302** |
| | | | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | | | | |
| நிகழ்ச்சித்திட்டத்திற்கான மானியம் | V | - | 788,646 | 788,646 | - | 592,424 | 592,424 |
| அட்டுறு செலவினங்கள் | V | 896,401 | (46,750) | 849,650 | 476,637 | (46,750) | 429,887 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **896,401** | **741,896** | **1,638,296** | **476,637** | **545,674** | **1,022,312** |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | **9,738,465** | **442,152** | **10,180,618** | **5,166,582** | **145,821** | **5,312,404** |

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு**

**I ஆதன, பொறி, உபகரணம்**

(அ) இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLAS) படி, கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் போது பெறுமானத்தேய்வு சாட்டப்படாது கைதவிர்க்கப்படும் ஆண்டின் போது முழு ஆண்டின் பெறுமானத்தேய்வும் சாட்டப்படுகின்றது. எஸ்எல்எப்ஆர்எஸ் இன் கீழ் சொத்துக்கள் பயன்பாட்டிற்குக் கிடைக்கப்பெறுகையில் பெறுமானத்தேய்வு சாட்டப்பட்டு சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு விற்பனைக்காக அல்லது மீள கருத்திற்கொள்ளப்படும் திகதிகளில் முந்திய திகதியில் முடிவுறுத்தப்படும்.

(ஆ) அலுவலக உபகரணத்தில் மூலதனமாக்கப்பட்ட பழுதுபார்த்தல் செலவினங்கள் 2011 ஆம் ஆண்டின் போது இலாப நட்டக் கணக்கிற்கு சாட்டப்பட்டுள்ளதுடன் சாட்டப்பட்ட பெறுமானத்தேய்வும் இதன் படி சீராக்கப்பட்டுள்ளது.

மாற்றங்களிலிருந்து உருவாகும் தாக்கங்களும் பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| **எஸ்எல்எப்ஆர்எஸ் சீராக்கங்களின் தன்மை / தாக்கம்** | **உரிமை மூலதனத்திற்கு** | **ஒருங்கிணைப்பிற்கு** | |
|---|---|---|---|
| | **2011 திசெம்பு 31 இல் உள்ளவாறானது** | **2011 சனவரி 01 இல் உள்ளவாறானது** | **2011 திசெம்பு 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானம்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் போது பெறுமானத்தேய்வு சாட்டப்படாது இனங்காணப்பட்ட பெறுமானத்தேய்வு | 585,171 | 145,821 | 439,350 |
| மூலதனமாக்கப்பட்ட பழுதுபார்த்தல் செலவினங்களிற்கு சீராக்கம் | (163,450) | - | (163,450) |
| மூலதனமாக்கப்பட்ட பழுதுபார்த்தல் செலவினங்கள் மீதான பெறுமானத்தேய்விற்கு சீராக்கம் | 20,431 | - | 20,431 |
| | **442,152** | **145,821** | **296,331** |

**II அரசாங்க மானியம்**

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பெறப்பட்ட சகல மூலதன மானியங்களும் மூலதனச் சொத்துக்களும் பிற்போடப்பட்ட வருமானமாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLFRS) பிரயோகத்தின் காரணமாக நிகழ்ச்சித்திட்டங்களுக்காகப் பெறப்பட்ட மூலதன மானியம் இலாப நட்டக் கணக்கில் ஏற்பிசைவு செய்யப்பட்டு மூலதனச் சொத்துக்களுக்காகப் பெறப்பட்ட மானியம் அரசாங்க மானியமாக மீள் வகைப்படுத்தப்பட்டு தொடர்புபட்ட சொத்துக்களின் வாழ்க்கைக் காலப்பகுதியில் காலக்கழிவு செய்யப்பட்டுள்ளது.

மாற்றங்களிலிருந்து உருவாகும் தாக்கம் பின்வருமாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| **இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLFRS) சீராக்கங்களின் தன்மை/ தாக்கம்** | **உரிமை மூலதனத்திற்கு** | | **2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரமான வருமானத்திற்கு** |
|---|---|---|---|
| | **2011 திசெம்பபு 31 இல் உள்ளவாறானது** | **2011 சனவரி 01 இல் உள்ளவாறு** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நிகழ்ச்சித்திட்டங்களுக்காகப் பெறப்பட்ட மானியங்கள் மீதான சீராக்கம் | 5,582,176 | 7,362,767 | (1,780,591) |
| அரசாங்க மானியத்தின் காலக்கழிவு | 2,002,697 | - | 2,002,697 |
| | **7,584,873** | **7,362,767** | **222,106** |

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு**

**பாடசாலைப் போட்டிகளுக்காக பெறப்படும் இலங்கை வங்கி உதவிகள்**

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், இலங்கை வங்கியிலிருந்து நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பெறப்பட்ட ஓர் தொகை நடைமுறையல்லாப் பொறுப்பின் கீழ் ஓர் பொறுப்பாக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமத்தின் கீழ் (SLFRS) , பிடித்து வைக்கப்பட்ட உழைப்பிற்கு பெறப்பட்ட தொகை சீராக்கப்பட்டு இக் கணக்கிற்கு எதிராகப் பதியப்பட்ட செலவினங்கள் 2011 நிதிக் காலப்பகுதிக்கான இலாப நட்டக் கணக்கிற்குச் சாட்டப்பட்டுள்ளது.

மாற்றங்களிலிருந்து உருவாகும் தாக்கம் பின்வருமாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| **இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLFRS) சீராக்கங்களின் தன்மை/ தாக்கம** | | | |
|---|---|---|---|
| | **உரிமை மூலதனத்திற்கு** | | **2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரமான வருமானத்திற்கு** |
| | **2011 திசெம்பபு 31 இல் உள்ளவாறானது** | **2011 சனவரி 01 இல் உள்ளவாறு** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| பொறுப்பாக மீள் ஏற்பிசைவு | 128,011 | 128,011 | - |
| செலவினங்கள் மீதான சீராக்கம் | (75,000) | - | (75,000) |
| | **53,011** | **128,011** | **(75,000)** |

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு**

# கணக்கிணக்கங்களின் குறிப்புகள்

**IV இளைப்பாற்று நலன் கடப்பாடுகள்**

அதிகாரசபை இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு(SLFRS) இணங்க பணிக்கொடைச் சமன்பாட்டு முறையைப் பயன்படுத்தி செயற்திட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி இளைப்பாற்று நலன் கடப்பாடுகளுக்கான ஏற்பாடு ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது. பொறுப்பின் ஏற்பிசைவின் விளைவாக 2010 ஆம் 2011 அறிக்கைக் காலப்பகுதியின் போது இச் சீராக்கங்கள் கடந்த காலத்திற்கும் அமுலாகும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாற்றங்களிலிருந்து உருவாகும் தாக்கம் பின்வருமாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| **இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLFRS) சீராக்கங்களின் தன்மை/ தாக்கம்** | | | |
|---|---|---|---|
| | **உரிமை மூலதனத்திற்கு** | | |
| | **2011 திசெம்பபு 31 இல் உள்ளவாறானது** | **2011 சனவரி 01 இல் உள்ளவாறு** | **2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரமான வருமானத்திற்கு** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| ஏற்பாட்டின் ஏற்பிசைவு | (149,027) | (102,638) | (46,389) |

# கணக்கிணக்கங்களின் குறிப்புகள்

**V நிகழ்ச்சித்திட்டத்திற்கான மானியம்**

இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு(SLFRS) இணங்க, அறிக்கைக் காலப்பகுதிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் அளவிற்குச் சமனான விபரமான வருமானக் கூற்றில் அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்டச் செலவினங்களுக்காகப் பெறப்பட்ட மானியங்களை ஏற்பிசைவு செய்யப்படுவதற்கு கொள்கை மாற்றப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஆண்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட மானியம் மற்றும் அட்டுறு நிகழ்ச்சித்திட்டச் செலவினங்கள் கடந்த காலத்திற்கும் அமுலாகும் வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

மாற்றங்களிலிருந்து உருவாகும் தாக்கம் பின்வருமாறு பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

**இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLFRS) சீராக்கங்களின் தன்மை/ தாக்கம்**

| | உரிமை மூலதனத்திற்கு | | |
|---|---|---|---|
| | 2011 திசெம்பபு 31 இல் உள்ளவாறானது | 2011 சனவரி 01 இல் உள்ளவாறு | 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரமான வருமானத்திற்கு |
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆண்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட மானியங்களிற்கான சீராக்கம் | 788,646 | 592,424 | 196,221 |
| அட்டுறு நிகழ்ச்சித்திட்டச் செலவினங்களுக்கான சீராக்கம் | 46,750 | 46,750 | - |